ஒரு சிலர் தவிர யார் வந்தாலும், தயவு தாட்சணியம் பாராமல், கழுத்தைப் பிடித்து வெளியே தள்ள வேண்டும் என்பது, என் வீட்டுக் காவலாளிக்கு நான் இட்டிருக்கும் கட்டளை! சந்தேகமாக இருந்தால், நேரடியாக வந்து பரிசோதனை செய்து பார்த்துக் கொள்ளுங்கள்!'' என்றாள் அவள் மீண்டும் எகத்தாளமாகவே!

விழியிடுங்க, அவளைக் கூர்ந்து பார்த்தான் கிருபாகரன்!

''அப்படியானால், நம் குழந்தையைப் பார்க்க ஆசைப்பட்டு, நான் அங்கே வருவேன் என்று, நீ எதிர்பார்த்திருக்கிறாய்! அப்படித்தானே?''

ஒரு கணம் தூக்கிவாரிப் போட்ட போதும், உடனே சமாளித்து, ''பின்னே இருக்காதா?'' என்றாள் அவள். ''இந்த நிறுவனத்தின் பங்குகளுக்காக, ஒரு குழந்தையை உருவாக் கியவர், கைவிட்டுப் போன சேர்மன் பதவிக்காக, அதே பிள்ளையைக் கடத்தி பிளாக்மெயில் பண்ண மாட்டீர்கள் என்று, என்ன நிச்சயம்?'' என்று குத்தலாகவே கேட்டுச் சமாளித்தாள். ''நீங்கள்தான், ஒன்று வேண்டும் என்றால், எந்த அளவுக்கும் இறங்கி, என்ன வேண்டுமானாலும் செய்வீர்களே!''

என்ன பதில் சொல்வான்?

இல்லையென்று மறுக்க முடியாதே!

பதில் சொல்ல முடியாமல் திகைத்த அவனுக்கு நல்ல வேளையோ, அன்றி, அடுத்து என்ன கேட்டு விடுவானோ என்று உள்ளூரக் கலங்கிக் கொண்டிருந்த மாதவியின் நல்ல நேரமோ, டைப் அடித்த காகிதங்களை எடுத்துக் கொண்டு, ஸ்டெனோ உள்ளே வந்தாள்.



மேற்கொண்டு, வேலை மட்டும் நடந்தது.

இந்தச் சம்பவத்தை, மாதவி தன் தோழியிடம் மூச்சுக் கூட விடவில்லை!

இது மட்டுமல்ல! மறுநாள், தன் பங்குப் பத்திரங்களை எடுத்து வந்து, ''இந்தா வைத்துக்கொள். கூடவே, இவை அத்தனையையும் உன் பேரில் மாற்றிவிடச் சம்மதித்துக் கடிதமும் எழுதி வைத்திருக்கிறேன். பயன் படுத்திக்கொள்!'' என்று கிருபாகரன், அவள் முன் வைத்ததையும்!

ஒரு மாதிரி உலுக்கி விட்டபோதும், புதிய மாதவி உடனே யோசித்தாள்.

இவைகளின் விலையாகக் கிருபாகரன் கேட்கப் போவது, மகனையா? ஆனால், ஏன்? புரியாத விசித்திரமாகத் தோன்றியது!

எது எப்படியாயினும், இவன் நிழல்கூட, மகன் மீது படக்கூடாது என்பதில் மாதவி உறுதியாக இருந்தாள்.

எனவே, அந்தப் பத்திரங்களை அவன் புறமே தள்ளி விட்டாள். ''இதற்கு என்ன அர்த்தம்? இதே போல, என் பங்குகளை நானும் உங்களுக்கு எழுதித் தர வேண்டும் என்பதா? மன்னிக்க வேண்டும்! குறிப்புக் காட்டுமுன், உங்கள் விருப்பத்தை நிறைவேற்றி வைக்க, நான் முன்னைப் போல முட்டாள் அல்ல! அதனால், உங்களுடையதை எடுத்துப் போங்கள்! பெரும் தியாகங்கள் செய்து பெற்றவை ஆயிற்றே! எனக்கு வேண்டாம்! தேவையுமில்லை!''

கண் மூடித் திறந்து, ''உன்னிடம் எப்படி எடுத்துச் சொல்லிப் புரிய வைப்பது என்றே புரியவில்லை!'' என்றான் கிருபாகரன்.



விடுவாளா? வெகுவாக அதிசயப்பட்டாள். ''என்னது? நீங்களா இப்படிச் சொன்னீர்கள்? ஒருவேளை, உலகம் மாற்றிச் சுற்றத் தொடங்கி விட்டதா?''

அவன் பேசாதிருந்த போதும், அவளுக்கு விட மனம் வரவில்லை!

''என்ன? நான் சொன்னதும் உங்களுக்குப் புரிய வில்லையா?' மலை விழுங்கி மகாதேவனுக்குக் கதவும் ஓர் அப்பளமாம்!' என்று ஒரு பழமொழி உண்டாமே! அதைப்போல, இதைவிடப் பெரிய, மகாப் பெரிய விஷயங் களை எல்லாம், குரலில் ஒரு பிசிர் தட்டாமல், ஒரு சொல் பிசகாமல், தெள்ளத் தெளிவாக உச்சந் தலையில் ஆணி அறைந்தாற்போலச் சரியான வார்த்தைப் பிரயோகம் செய்து விளக்குகிறவர் ஆயிற்றே! இப்போதென்ன திடீர் சிரமம்? தமிழ் மறந்து விட்டதா? அல்லது, தொண்டைதான் அடைத்துப் போயிற்றா?''

''அன்றைய தவறை நினைத்து, நான் வருந்தாத நாள் இல்லை, மாதவி!''

மா... தவியா? 'மது'கூட, ஏற்ற பாத்திரத்தின் ஒரு பகுதிதானே!

''திருத்திக் கொள்ளுங்கள், தயவு செய்து!'' என்றாள் மாதவி ஆத்திரம் கொப்பளிக்க! தெரியாமல் செய்து விட்ட பிழைக்குத்தான் தவறு என்று பெயர்! நீங்கள் செய்தது, தெரிந்தே செய்த தப்பு! நீங்கள் செய்தது தப் பென்று உங்களுக்குத் தெரியாது? நம்பிய பெண்ணின் வாழ்வை அழிப்பது, எவ்வளவு சாதாரணமாக இருந்தது, அப்போது!''



''அப்பாவுக்குக் கொடுத்த வாக்கு மட்டும்தான், அப் போது பெரிதாகத் தோன்றியது! அப்பாவின் கடைசி ஆசை...''

''இப்போது மட்டும், அது மாறுவானேன்?'' என்று கேட்டவள், நிமிர்ந்து அவனை ஒரு கூர்வாள் பார்வை பார்த்தாள். ''ஒரு வேளை, அவர் உங்கள் தந்தையே அல்லவா? உங்கள் அம்மா உங்களை, வேறு...''

மேலே சொல்லக் கூசி, அவளாகவே நிறுத்திய போது, ''ஏய்...'' என்ற கூச்சலுடன் அவன் கையை ஓங்கி யிருந்தான்.

ஆனால், அவள் அச்சமற்று நோக்கவும், கிருபாகரின் கை தானாகக் கீழே இறங்கியது! ஏதோ நினைவில், அவன் முகத்தில் வருத்தம் படர்ந்தது! ''தவறான நடத்தை உள்ளவளைச் சொன்னால்கூட, ஒரு பெண்ணின் மேல், அபவாதம் சொல்லக் கூடாது என்பாயே! எப்படி மாறிவிட்டாய்!'' என்றான் வேதனைக் குரலில்.

மாற்றம் ஏன் நிகழ்ந்தது?

இப்படிச் சொன்னோமே என்ற கழிவிரக்கம் மாறி, ''பாடம் படித்தது யாரிடம்?'' என்றாள் மாதவி எகத்தாளமாக. ''பிரமாதமான நிர்வாகத் திறமை உண்டு என்று சொல்லுகிறார்களே, அதே சாட்சாத் உங்களிடம் அல்லவா?''

''மாதவி, அன்று என் லட்சியம்...''

''லட்சியமா? ஒரு பெண்ணின் உளமார்ந்த அன்பு, அவளது எதிர்காலம், குடும்பம், குழந்தை... எல்லாமே, அலட்சியமாக இருந்ததே! நீயும் உன் குழந்தையும் எனக்கு வெறும் கருவிகள்

மாத்திரமே... இன்னொருத்தி மீதுதான் காதல் என்று கூசாமல் சொல்ல முடிந்ததே! ஒப்பிட்டுப் பார்த்தால், நான் அப்படியென்ன பிரமாதமாகச் சொல்லி விட்டேன்? என் பேச்சால், யாருக்கேனும் கெடுதல் உண்டா? அந்த வகையில், உங்களிடம் நான் இன்னமும் பாடம் கற்றாக வேண்டும் போல அல்லவா தெரிகிறது?''

கிருபாகரன் பேச்சிழந்து நிற்கையில், 'பழி பழி' என்று மாதவியின் மனம் கொக்கரித்துக் கூத்தாடியது.

நேரடிப் பேச்சை விரும்பாமல், துணையை வைத்துக் கொண்டே பேசியவளுக்குப் பொது நிர்வாகி இன்றும் வராதது, வசதியாகவே தோன்றியது! எல்லாவற்றையும் பேசித் தீர்த்து விடலாம் அல்லவா?

பதிலுக்குப் பதில்! சந்திர குப்த மௌரியரின் சட்டத்தைப் போலக் 'கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்!'

கைகள் தன் போக்கில் மேஜை மீதிருந்த ஃபைல்களைச் சீராக அடுக்கி வைத்தன.

கண்களை வேலையில் பதித்தபடி கேட்டாள். ''எல்லாம்தான் உங்கள் லட்சியத்துக்கு ஏற்றபடி நடந்ததே! அப்புறம், இந்தக் கருவிகளைப் பற்றி என்ன வந்தது? ஒரு வேளை, உங்கள் அந்த... அவளுக்குக் குழந்தை இல்லையா? பிறக்கவே பிறக்காதோ? அல்லது, உங்களுக்குத்தான் அடுத்த பிள்ளை பெற முடியாமல், ஏதேனும் ஆகிவிட்டதா?'' என்று, குரூரத்துடன் கேட்டாள்.

''நான் அவளை மணக்கவில்லை!'' என்றான் அவன் சுருக்கமாக,



ஒரு கணம், உலகம் அசைவற்று நின்றுவிட்ட உணர்ச்சி மாதவிக்கு! அவ்வளவு அதிர்ச்சி!

எத்தனை முறை.. எத்..த்தனை முறை, கிருபாகரனை முகமறியாத இன்னொருத்தியோடு சேர்த்துக் கற்பனை செய்து நொந்திருக்கிறாள்! நொந்து துடித்திருக்கிறாள்! எவ்.. வளவு, அளப்பரிய நோவு!

ஆத்திரத்துடன் நிமிர்ந்து, ''ஏன்? இன்னொருத்தியை மணந்தால், கிடைத்த பங்குகள் பறி போய்விடும் என்று, தாத்தா இன்னோர் ஏற்பாடும் செய்து வைத்திருந்தாரா? செய்திருப்பார்! செய்திருப்பார்! உங்களை மாதிரி எத்தனை பேரை அவர் பார்த்திருப்பார்! என்ன பதிலையே காணோம்?'' என்றாள் குரல் நடுங்க.

''அப்படி எதுவும் எழுதி வைக்கவில்லை! ஆனால்...''

''ஆனால்? ஆனால் என்ன?''

''உன் இடத்தில் இன்னொருத்தியை வைக்க முடியாமல் மணக்கவில்லை என்றால், நம்புவாயா?

''மாட்டேன்!'' என்றாள் அவள் கீச்சிட்ட குரலில். ''நம்பவே மாட்டேன். அதைவிட, அவளை மணப்பதால், புதிய பங்குகள் ஏதும் வர வாய்ப்பில்லை என்பதால், அவளை மணக்க வில்லை என்றால் ஒத்துக் கொள்ளும்படி இருக்கும்! அல்லது, அவள், அந்த சுபிக்குத்தான், 'இரண்டாம் கை'யாகி விட்ட கணவன் ருசிக்கவில்லையோ? என்ன, உண்மை அதுதானா?''

அவளை வெறித்துப் பார்த்துவிட்டு, கிருபாகரன் வெளியேறினான்!



அவளது மன அமைதியை மிகவும் பாதித்த, இந்தச் சம்பவத்தையும் மாதவி, தோழியிடம் சொல்லவே இல்லை!

## 23



மனோகரி - கண்ணனின் திருமண நாள் நெருங்கிக் கொண்டு இருந்தது!

யமுனாவுக்குக் கோயம்புத்தூர் நகைகள்தான் பிடிக்கும்! மற்ற எல்லா இடங்களையும் விட, அங்கேதான் வேலைப்பாடு மிகவும் நன்றாக இருக்கும் என்பாள். நகைகள், பட்டுகள் வாங்கவும், சட்டைகள் தைக்கவும் என்று, மனோகரியை முன்னதாகவே வருமாறு கூப்பிட்டாள்.

தோழியின் தயக்கத்தைப் புரிந்து, மாதவியே அவளை வற்புறுத்தி அனுப்பி வைத்தாள்! ''நான் இன்னமும் அனுபவமற்ற சின்னப் பெண்ணில்லை, மனோ! ஒரு பெரிய நிறுவனத்தை நிர்வகிக்கிறேன். அந்தத் திடம் இருக்கிறது! எதற்கும், பழைய மாதிரி, ஒடிந்துவிட மாட்டேன்! தனியாக இருக்க, எனக்கு, எந்தப் பயமும் இல்லை! நீ கிளம்பு!'' என்று அவள் பலமுறை சொன்ன பிறகே, மனோகரி கிளம்பினாள்.

அந்தச் சமயத்தில், அலுவலகத்தில் ஒன்று நடந்தது!

கச்சாப் பொருட்கள் வாங்கும் பிரிவில் பணி புரிந்த ஒருவன், அந்த மாதம் வாங்கிய பொருட்களின் பட்டியலைக் கொணர்ந்து கொடுத்துவிட்டு, வெளியே போகாமல், தயங்கி நின்றான்.



கேள்வியாய் நோக்கியவளிடம், ஒரு மூட்டைக் குறைகளை அவிழ்த்து விட்டான்.

பொவாக, அந்தக் குறைகள் அத்தனையும் கையைக் காட்டியது கிருபாகரனைத்தான்.

பணியாட்களிடையே பார பட்சம் காட்டுகிறான்! பெண்கள் என்றால், தனி இளக்கம்! அவர்கள் கேட்டது கிடைக்கும்! உள் கமிஷன் வாங்கிக் கொண்டு, நல்ல பொருட்களைக் கூடத் திருப்பி அனுப்பிவிட்டுத் தனக்கு வேண்டியவர் களிடம் வாங்குகிறான்! தன்னைப் போன்ற உண்மை ஊழியர்களிடம் கடுமையாக நடக்கிறான்! போகவர, ஆட்டோ செலவுகூடக் கொடுப்பது இல்லை!... இப்படிப் பலது!

''அவரைப் பற்றிய உண்மையைச் சொல்லி விடுவேனோ என்ற பயம், மேடம்! எல்லாவற்றையும் கணக்கெழுதி, அவரே எடுத்துக் கொள்கிறார் என்று கேள்வி! வந்து...'' என்றவன், தயக்கத்தைக் காட்டும் விதமாகத் தொண்டையைச் செருமி, ஓர் எட்டு அருகில் வந்து, ''கிருபாகரன் சாரைப் பற்றி, உங்களுக்கு நான் சொல்ல வேண்டியது இல்லை, மேடம். அவரைப் பற்றித்தான், உங்களுக்கே நன்றாகத் தெரியும்!'' என்றான் ஓர் அசட்டு இளிப்புடன்!

உள்ளே பொங்கிய ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு, இமைபிடுங்க அவனைக் கணித்தாள் மாதவி!

இளைஞன்தான்! ஆனால், வயதுக்கு மீறிய முதிர்ச்சி முகத்தில் தெரிந்தது! கண்களில் கவனமும், கணக்கும்!

அவளைப் பற்றிய கணக்கு! ஆண் புத்தி! இங்கே, குட்டை இன்னும் கலங்கியிருப்பதாக எண்ணி, மீன் பிடிக்க

முயற்சிக்கிறான்! வற்றி வறண்டு போனது, தெரியாது! பாவம்!

சமீபத்தில், இவன் ஏதோ தப்பு செய்து, கிருபாகரிடம் மாட்டியிருக்க வேண்டும் என்று தோன்றியது!

புகார் என்று வந்தால், விசாரித்துத்தானே ஆக வேண்டும்?

''உங்கள் குற்றச்சாட்டுக்களை எழுதிக் கொடுங்கள். விசாரிக்கிறேன்!'' என்றாள் அமைதியாக.

அவள் எதிர்பார்த்தது போலவே, அவன் முகம் வெளுத்தது! ''மேடம், என் பெயர் தெரிந்தால், தொலைத்துக் கட்டிவிடுவாரே!'' என்று அஞ்சினான். ''அவரைப் பற்றி, உங்களுக்குத் தெரியாதா?'' என்று, இன்னுமொரு பின் குறிப்பு!

''பரவாயில்லை. உங்கள் பெயர் வெளியே வராமல் பார்த்துக் கொள்ளுகிறேன்! ம்.. உங்கள் புகாரில் கிரு பாகர் தாட்சணியம் காட்டிய பெண்களின் பெயர்களும் வேண்டும்!''

இப்போதும், மாதவி எதிர்பார்த்தது போலவே, அவன் முகத்தில் இளிப்பு பரவியது!

இந்தப் பெண்களின் பெயர்களை வைத்துக் கொண்டு, மாஜிக் கணவனை மாதவி வாட்டப் போகிறாள் என்கிற எதிர்பார்ப்பு!

அவசர அவசரமாக, எழுதிக் கொண்டு வந்து கொடுத்து விட்டுப் போனான்.

அவ்வப்போது, தொழிற்சாலைக்குள் சென்று பார்ப்பது, மாதவிக்குப் பழக்கம்தான். அதுபோல, அன்று சென்றபோது,



கூட வந்த சூப்பர்வைசரை நிறுத்தி விட்டுத் தனியாகவே சுற்றிப் பார்த்தாள்! ஒரு சிலரிடம் பேச்சும் கொடுத்தாள். 'ஷிஃப்ட்' மாற்றத்தின்போதும், வந்து கவனித்தாள்.

அச்சமயங்களில், புகார் கொடுத்த மாணிக்கம் அங்கே இருந்தால், அவனிடமும் இரண்டு வார்த்தை பேசிவிட்டுப் போனாள்.

அதில் அவனுக்கு மிகுந்த பெருமை!

சில தினங்கள் கழித்து, சைக்கிள் இருக்கை அமைப்புக்காக வாங்கி வரப்பட்ட கம்பிகள், தரம் குறைந்தவை என்ற புகார், மாதிரிக்கான கம்பிகளோடு, மாதவியிடம் வந்தது! கம்பிகளை வாங்கி வந்தவன் மாணிக்கம் என்பதால், அவனும் விளக்கம் கூற வந்திருந்தான்.

ஏற்கெனவே, கிருபாகரனை வரவழைத்துச் சில விவரங் களை மாதவி கேட்டறிந்து கொண்டிருந்தாள்.

தொழிற்சாலையில் வேலை செய்த கோசலைக்கு, இரண்டு மாத விடுமுறை முடிந்து வந்த மறுநாளே, மீண்டும் ஒரு மாத லீவு ஏன் கொடுக்கப்பட்டது? செல்விக்கு இடமாற்றம் ஏன் கொடுக்கப்பட்டது? இன்னோரன்ன கேள்விகள்!

மாணிக்கத்தையும், அவனை அழைத்து வந்தவனையும், தலையசைவால் நிற்கச் சொல்லிவிட்டு, கிருபாகரன் சொன்ன பதிலில் கவனமாயிருந்தாள் மாதவி.

கிருபாகரனும், ஒரு பார்வைக்கு மேல், வந்தவர்களைச் சட்டை செய்யவில்லை!

''நம் நிறுவனத்தில், பிரசவத்துக்கென்று இரண்டு மாதம் லீவு கொடுப்பதுண்டு! பொதுவாக, ஒன்பதாம் மாத இறுதி வரை





வேலை செய்துவிட்டு லீவு எடுத்தால், பிள்ளை பிறந்து நாற்பத்தைந்து நட்களில் வேலைக்கு மீண்டும் வருவார்கள்! கோசலையுடைய மாமியார் விழுந்து அடிபட்டதால், அந்த விடுமுறையைக் கோசலை, முன்னதாகவே எடுத்து விட்டாள். குழந்தை பிறந்து பதினைந்தாம் நாளே வேலைக்கு வந்தவளுக்கு, உடம்பு ஒத்துழைக்கவில்லை! சம்பளப் பணமும், அவசியம். எனவே, அவளுக்குரிய மற்ற விடுமுறை நாட்களை எல்லாம் சேர்த்துப் போட்டுக் கூடுதலாக ஒரு மாதம் லீவு கொடுத்தேன்! இப்போது, அவள் வாரத்துக்கு ஏழு 'ஷிஃப்ட்' வேலை செய்கிறாள், சனிக்கிழமை, ஓரிருவர் லீவு எடுப்பதுண்டு. அதனால், அன்றைக்கு இரண்டு 'ஷிஃப்ட்' செய்கிறாள். செல்வி பக்கத்தில் நின்று செய்கிறவள், அவளுக்கு நாத்தனார் முறை! தன் வேலையையும், இவள் தலையில் கட்ட முயன்றாள். இடத்தை மாற்றிவிட்டால் அது முடியாதல்லவா? வேறு ஏதேனும் தெரிய வேண்டியிருக் கிறதா?''

''ஆமாம்!'' என்று, மாணிக்கத்தைப் பார்த்தாள் மாதவி.

ஏற்கெனவே, அவன் முகம் செத்துச் சுண்ணாம்பாயிருந்தது! அவன் கொடுத்த புகாரின் அடிப்படையிலான கேள்வி களின் விளக்கம்தான் கிருபாகரன் முதலில் சொன்னது முழுமையுமே!

மேஜை மீதிருந்த ஃபைலைக் கிருபாகரன் பக்கம் நகர்த்தி, ''மாணிக்கத்தின் மேல், பல புகார்கள் இதற்கு முன்னரும் வந்திருப்பதாகத் தெரிகிறது! அவரை ஏன் வேலை நீக்கம் செய்யவில்லை? இப்போது, நேரடிப் புகார்! இதற்கு என்ன செய்வது?'' என்று வினவினாள், மாதவி.



வேலை நீக்கமா?

மாணிக்கம் மிரண்டு விழிக்க, கிருபாகரன் பதில் சொன்னான், ''இவன் தந்தை, இந்த நிறுவனம் தொடங்கிய போது வேலையில் சேர்ந்து, ஓய்வு பெறும் வரை, உண்மையாக உழைத்தவர்! அவருக்காகப் பார்த்து, வெறும் எச்சரிக்கையோடு விட்டிருந்தோம்! ஆனால், இப்போது...''

''சாமீ, இந்த ஒரு தபா விட்டிடுங்க! இனிமே, ஒழுங்கா இருக்கிறேனுங்கம்மா! சொ...சொல்லுங்க, சார்!'' என்று கெஞ்சினான் மாணிக்கம்! விட்டால், காலிலேயே விழுந் திருப்பான்!

மாதவியை ஒரு தரம் பார்த்துவிட்டு, ''சரி... போ. ஆனால், இதுதான் கடைசி எச்சரிக்கை! அப்புறம், இன்னொன்று. பைக்குக்குப் பெட்ரோல் அலவன்சும் வாங்கிக் கொண்டு, ஆட்டோ செலவும் எழுதாதே! தரமாட்டார்கள்! இதுவும், உனக்கு முன்பே எச்சரித்ததுதான்! மறக்காதே! போ!'' என்று அனுப்பினான்.

மாணிக்கத்தின் பின்னே கதவு சாத்தியதும், ''இவன் பல புகார்கள் என்னைப் பற்றிக் கொடுத்ததாகக் கேள்விப் பட்டேன். அவன் காது கேட்க, அதை விசாரிப்பது போலவும் காட்டி முடித்து விட்டாய். ஆனால், அவனையே குற்ற வாளியாக்கத் தோன்றியது எப்படி? நீ அவனைக் கண் காணிக்கச் சொன்னதும் எனக்குத் தெரியும்!'' என்று கிருபாகரன் கேட்டான்.

''தன் குற்றத்தை மறைக்கத்தான் ஒருவன் இன்னொருவன் மேல் குற்றம் சுமத்துவான் என்று, சுந்தரம் அங்கிள்

சொல்லுவார். அதனால்தான், அவனைக் கண்காணித்ததும், கண்டு பிடித்ததும்.''

கிருபாகரன் முறுவலித்தான். ''பாவம்! தான் புகார் கொடுத்ததின் பின் விளைவே, இந்த அடி என்று எண்ணிப் பார்க்கவே, அவனுக்குத் தோன்றாது! ரொம்பக் கெட்டிக்காரத்தனமாகச் செயல்பட்டிருக்கிறாய்!'' என்று பாராட்டினான்.

வாய் பாராட்டியபோதும், கண்களில் ஆராய்ச்சியை உணர்ந்து, அவள் பதில் கொடுத்தாள். ''புத்தி இருப்பது ஆச்சரியமாக இருக்கிறதா? மூன்று ஆண்டுகளாக, முயன்று வளர்த்தது! இந்தப் புத்தி அன்றே இருந்திருந்தால், உங்களை வீட்டுக்குள் நுழைய விட்டிருக்கவே மாட்டேன்!'' என்றாள் கடுமையான குரலில்.

சிறு அமைதியின் பின், ''அடுத்த ஃபைலை இப்போது பார்ப்போமா, அல்லது பிறகு வைத்துக் கொள்வோமா?'' என்றான் அவன்.

'எனக்கு ஒன்றும் பாதிப்பு இல்லை! நீ வேண்டுமானால், அமைதிப்படுத்திக் கொள்ள அவகாசம் எடுத்துக் கொள்!' என்கிறானாக்கும்?

உதடுகளை அழுந்த மூடிக்கொண்டு, அடுத்த ஃபைலுக்காகக் கையை நீட்டினாள் மாதவி.

தனியாக அமர்ந்து எண்ணிப் பார்க்கும்போது, தோற்று விட்ட உணர்வுதான் மாதவிக்கு உண்டாயிற்று.

கிருபாகரனைப் பற்றி, யார் என்ன சொன்னால் அவளுக்கு என்ன வந்தது?



தலைமைப் பீடத்தில் அமர்ந்திருக்கும் அவள், இருவரையும் வைத்துப் பாரபட்சமின்றி விசாரித்து முடிவு சொல்ல வேண்டியதுதானே? வெறுமனே, விவரம் தெரிந்துகொள்ள விரும்புகிற மாதிரி, என்ன பாவலா?

அதற்கும் மேலாக, அந்த மாணிக்கத்தை வேறு வகையில் பிடித்து, கிருபாகரன் காலிலேயே விழ வைத்து... சே! என்ன முட்டாள்தனம்!

அவன் திருமணம் செய்து கொள்ளவில்லை என்பதாலேயே நல்லவனாகி விட முடியுமா? அவனது வஞ்சகம்தான் பொய்யென்று ஆகிவிடுமா?

ஜிஎம்முக்கு உடம்பு சரியில்லாமல் போனதில் தொடங்கி, அவனோடு கொஞ்சம் சாதாரணமாகப் பேசத் தொடங்கியது. பெரிய தப்பாக, இப்போது மாதவிக்குத் தோன்றியது!

இனிக் கவனத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்று முடிவு செய்தவள், அந்தத் தீர்மானத்தினால், பெற்ற மகனையே தொலைத்துவிட இருந்தாள்!

## 24



நல்ல வேளையாக, மாணிக்கம் சம்பவத்துக்கு அடுத்த இரண்டு நாட்களும் விடுமுறை நாட்களாக அமைந்தன. ஒரு தேசிய விடுமுறையும், ஞாயிற்றுக் கிழமையும் அடுத்தடுத்து வந்தன.

சனிக்கிழமை முழுவதையும் மகனோடு நேரத்தைக் கழித்தது, மாதவிக்கு மிகவும் ஆனந்தமாக இருந்தது!



மறுநாள் நித்திலனை வீட்டுக்கு அடுத்த தெருவில் இருந்த பூங்காவுக்கு அழைத்துச் சென்றாள்.

காலையும் மாலையும், உடல் பயிற்சிக்காக நடப்பவர்கள் அங்கே அதிகம்! அதனால், பூங்காவும் நன்கு பராமரிக்கப்பட்டு வந்தது! எனவே, அவ்வப்போது, அங்கே மகனைக் கூட்டிப் போவது, அவளுக்கு வழக்கம்தான்!

காலையில் நடப்பவர்களை இடையூறு செய்யாத வகையில், எட்டு மணிக்கு மேலாக மகனோடு சென்றவள், சுமார் ஒரு மணி நேரம், ஓடிப்பிடித்தும், பந்து போட்டும், அவனோடு நன்கு விளையாடினாள்.

அவளுக்கு வியர்த்து விறுவிறுத்துவிட்ட போதிலும், நித்திலனுக்கு உட்காரப் பிடிக்கவில்லை! எனவே, பட்டர்ஃப்ளை விரட்டச் சொல்லிவிட்டு, அவன் அந்த வண்ணத்துப் பூச்சிகளின் பின்னே ஓடுவதை, மரத்தடியில் அமர்ந்து பார்த்து ரசித்தாள்.

''ஊகூம். அங்கெல்லாம் போகாதே, நித்தி! அம்மா கிட்டயே விளையாடு!'' என்று சொல்லிக்கொண்டே, இரண்டு வரிசை தள்ளியிருந்த புதரின் பின்புறம் மறைந்த நித்திலனை அழைத்து வர எழுந்தவள், அப்படியே நின்று விட்டாள்.

பூங்காவின் மறுபுறத்திலிருந்து, அகன்ற நடைபாதை வழியே, கிருபாகரன் வந்து கொண்டிருந்தான்!

இவன் நித்திலனை அவளோடு பார்த்து விட்டால்? மகன் என்று அறிந்து கொள்வானே!



சும்மாவே பிள்ளையைக் கேட்டவன், நித்தியை அறிந்தால் விடுவானா?

இப்போது, மகன் அருகே செல்வது ஆபத்து என்று முடிவெடுத்து, மாதவி அங்கேயே நிற்க, அதற்குள் அவளைப் பார்த்துவிட்டு, கிருபாகரன் அவள் அருகே வந்தான்.

''வியர்த்திருக்கிறதே! வெகு நேர நடையா?'' என்று அவளையே பார்த்தபடி வினவினான்.

மாதவிக்கு ஒரே பதைப்பு! வண்ணத்துப் பூச்சியை விரட்டிக் கொண்டு, நித்தி வாயிற்புறம் சென்று விடக்கூடாதே என்று ஒரு பயம்! கூடவே, இவன் இங்கே நிற்கும்போது, தன்னைத் தேடிப் பிள்ளை வந்துவிடக் கூடாதே என்று, அதுவும் ஒரு கலக்கம்!

ஒரு மண்ணும் தெரியாமல், சாவகாசமாக விசாரித்துக் கொண்டு நிற்கிறானே!

அவனை விரட்டுவது ஒன்றே முக்கியமாகத் தோன்ற, ''என்ன? லீவு நாளிலாவது, உங்களைப் பாராமல் நிம்மதியாக இருக்கலாம் என்று நினைத்தால், ஒரு பூங்காவுக்குக் கூட, உங்கள் தொல்லையின்றி வர முடியாதா?'' என்றாள் கடுமையான குரலில்!

அவன் யோசனையோடு புருவம் சுருக்கிப் பார்க்கவும், ''நீங்கள் இங்கேயே இருப்பதானால், நான் போகிறேன்!'' என்று படபடத்துவிட்டு, 'உம்'மென்ற முகத்துடன் ஓர் எட்டு எடுத்து வைத்தாள் மாதவி.

''இல்லையில்லை! இந்த உன் நிம்மதியைக்கூட, நான் கெடுப்பானேன்? நானே போகிறேன்!'' என்று சிறு வாட்டத்துடன் கூறிவிட்டுத் திரும்பி நடந்தான் கிருபாகரன்.

அவனது நெடிய உருவம் கேட் தாண்டி வெளியேறும்வரை, அசுவாரசியம் போல நின்று கொண்டிருந்தவள், அவனது தலை மறைந்ததும், மகன் போன பக்கம் விரைந்தோடிச் சென்று பார்த்தாள்.

அங்கே அவனைக் காணவில்லை என்றதும், நெஞ்சுக்கூடு காலியாகி விட்ட உணர்வு அவளுக்கு!

இல்லை, பயப்படக்கூடாது என்று மனதுக்குள் உருப் போட்டபோதும், அவை வெறும் வார்த்தைகளாக இருந்தனவே தவிர, அவற்றின் அர்த்தம் மூளையை எட்டுவதாக இல்லை!

வயிறு கலங்க, இங்குமங்கும் ஓடி ஓடித் தேடியும், எங்கும் அவளுடைய அருமை மகனைக் காணவே இல்லை!

பூங்காவினுள் நித்திலன் இல்லை! இனி வெளியேதான் தேடியாக வேண்டும்! முன்புறமா? பின் பக்கமா? எந்த வாயில் வழியே, அவளுடைய துரு துரு செல்லம் பூங்காவை விட்டு வெளியே சென்றிருக்கக் கூடும்?

கடவுளே, இரண்டு பக்கமும் சாலைகள் ஆயிற்றே! எத்தனை கார்கள்...

எந்தப் பக்கம் செல்வது என்று முடிவு செய்ய முடியாமல் கலங்கித் திகைத்தபடி, இருபுறமும் பார்த்த மாதவியின் கண்கள், அச்சத்தில் மேலும் அகன்றன!



வெளி வாயிலில் இருந்து, தோளில், நித்திலனைத் தூக்கி வைத்துக்கொண்டு, உள்ளே வந்தவன், கிருபாகரன்!

கடவுளே! அவனுக்குத் தெரிந்து போயிற்றா?

அசைய மாட்டாத சிலையாகத் தூர நின்று மாதவி பார்க்கும்போதே, வெளி வாயிலை அடுத்திருந்த பக்க வாட்டுப் பாதையில் நின்று கொண்டிருந்த பூங்காக் காவலனிடம் சென்று, ''யார் பிள்ளையோ? கேட்டைக் கடந்து, சாலையில் செல்ல முயன்றது! இதன் அம்மா உள்ளேதான் இருப்பதாகச் சொன்னதால், இங்கே தூக்கி வந்தேன். குழந்தையை யாராவது தேடி வந்தால், உரியவர்கள்தானா என்று சரிபார்த்துக் கொண்டு, கொடுத்து விடுப்பா!'' என்று பிள்ளையைக் காவலனிடம் ஒப்புவித்துவிட்டுப் போனான், அவன்! கிருபாகரன்!

அப்பாடி என்று தொய்ந்த கால்களைச் சிரமத்துடன் எடுத்து வைத்து, மகனிடம் சென்றாள் மாதவி!

அடுத்த வாரக் கடைசியில், மனோகரி - கண்ணனின் திருமணம்.

ஜிஎம்மோடு சேர்ந்து, நிறுவனத்தைப் பார்த்துக் கொள்ளும்படி ஒரு குறிப்புக் காட்டிச் சொல்லிவிட்டு, நாலு நாட்கள் முன்னதாகவே, மாதவி கோவைக்குச் சென்று விட்டாள்.

திருமணத்துக்கு என்று, லீவு எடுத்துக் கொண்டு, நிறுவனத்திலிருந்து யாரும் வரத் தேவையில்லை என்ற குறிப்பு! அப்படி வந்துதான் தீர வேண்டும் என்ற அளவு நெருக்கமும் கிடையாதுதானே!

எனவே, கிருபாகரன் வரமாட்டான் என்ற நிச்சயத்தில், நித்திலனைப் பற்றிய கவலைகூட இல்லாமல், நிம்மதியாக யமுனாவோடு சுற்றினாள். மனோகரியோடு கலகலத்தாள்! கண்ணனைக் கிண்டல் செய்தாள்!

எல்லாம் செவ்வனே நடக்கிறது என்பதற்கு மேல், சென்னையைப் பற்றி யாரையும் பேச விடவே இல்லை!

இவ்வளவு தூரத்துக்கு எந்தப் பிரச்சினையும் வர முடியாது என்ற ஒரு கற்பனைப் போர்வையைப் போர்த்துக்கொண்டு, கலகலப்பாக இருந்தாள்.

இப்படியே, நான்கு நாட்களும் கழிந்து, திருமணமும் இனிது நிறைவேறி, வரவேற்புக்கும் எல்லாரும் ஆயத்த மாயினர்!

நித்திலனுக்கு, வெயிஸ்ட் கோட்டுடன், நேரு மாதிரி உடை! அவனுக்கு உடையணிவித்து, ஒரு பணியாளின் பொறுப்பில் அனுப்பிவிட்டு, மனோகரியின் அலங்காரத்தைச் சரி பார்த்துவிட்டு, மாதவி தன்னையும் அலங்கரித்துக் கொண்டாள்!

இரவு கடைசி ரயிலில் கிளம்ப வேண்டும் என்பதால், சாமான்களையும் ஓரளவு ஒதுக்கி வைத்துவிட்டு, வரவேற்பில், மனோகரியின் அருகில் யமுனாவோடு சேர்ந்து நின்று கொண்டாள்.

மனோகரி வேலை செய்த மருத்துவமனை அலுவலர்கள் அத்தனை பேரும் வந்திருந்தனர். மாதவிக்கும், செக்கப், பிரசவம், பிள்ளைக்குத் தடுப்பூசிகள் எல்லாம் பார்த்தவர்கள் அவர்கள்தானே? அவர்களை அழைத்துப் போய், உணவருந்த



உட்கார வைத்துவிட்டு, அவர்களைக் கவனித்தவாறே, நித்திலனுக்கும் உணவு கொடுத்துவிடலாம் என்று மகனைத் தேடியவள், மயக்கம் போட்டு விழாத குறைதான்!

ஏனெனில், தோளில் பிள்ளையோடு, மணமக்களுக்குப் பரிசைக் கொடுத்துக் கொண்டிருந்தான் கிருபாகரன்!

இப்போதும், நித்தி எங்காவது போய்விட்டானா? யார் என்று தெரியாமலேதான் கிருபாகரன் அவனைத் தூக்கிக் கொண்டிருக்கிறானோ என்று, சற்று நேரம் பொறுத்திருந்து பார்த்தாள் மாதவி!

முழுசாக, ஒரு நிமிஷம் ஆகுமுன்பே தாங்க முடியாமல் போய்விட, ஒரு பணியாளைக் கூப்பிட்டு, ''பையனுக்குச் சாப்பாடு கொடுக்க வேண்டும். அழைத்து வா!'' என்று அனுப்பி வைத்தாள்.

கிருபாகரன் கண்ணனிடம் பேசிக்கொண்டு இருக்கும் போதே, வேலையாள் சென்று பிள்ளையைக் கேட்க, ''சாப்பாட்டை இங்கேயே எடுத்துவா! நானே அவனுக்கு ஊட்டுகிறேன்! அல்லது நித்திலன் என்கூடச் சாப்பிடட்டும்!'' என்று அழுத்தமாக உரைத்தவாறே, மேடையை விட்டு இறங்கிப் பக்கவாட்டில் ஒதுங்கினான் அவன்.

காது கேட்கும் தூரத்திலேயே முகம் திருப்பி நின்றவளுக்கு அதற்கு மேல் பொறுக்க மாட்டாமல் போய்விட, வேகமாக அருகில் சென்று, ''இவனுக்கு என்ன கொடுக்கலாம், என்ன கொடுக்கக் கூடாது என்று, உங்களுக்கு என்ன தெரியும்?'' என்று ஆத்திரத்துடன் வினவினாள்!

''என் பிள்ளைக்கு எது நல்லது என்று, உன்னைவிட, எனக்கு நன்றாகவே தெரியும்! முறைக்காதே! எப்படி என்று தெரிய



வேண்டுமா? இவனிடம் நான் யார் என்று கேட்டுப் பார்... கேளேன்! ஏன்? என்ன பயம்?'' என்று, அமர்ந்த குரலில், அழுத்தமாகப் பேசினான் கிருபாகரன்.

பிள்ளையை அவனிடம் இருந்து பிடுங்கி விடலாமா என்று பார்த்தால், அந்த முயற்சியை எதிர்பார்த்தவன் போல, மகனை இதமாக அணைத்தாற்போல, இறுகப் பற்றியிருந்தான் அவன்.

சீற்றத்துடன் நோக்கிவிட்டு, ''யாரடா, இது?'' என்று, மாதவி கோபமாகக் கேட்டாள்.

நித்திலனுக்குத் தாயின் கோபம் புரியவில்லை! இதமாகத் தூக்கியிருந்தவனின் தோளில் சலுகையாய்ச் சாய்ந்து, ''அன்னி...க்குக் கார் டொம்முன்னு முட்டாமல் தூக்கிக்கிட்ட அங்கிள்!'' என்று விளக்கினான்!

''அங்கிள் இல்லைம்மா! அப்பா!'' என்று கிருபாகரன் திருத்தும்போதே, ''கா...கார் இடிக்காமலா? இது என்ன கதை?'' என்று அதிர்ந்துபோய்க் கேட்டாள் மாதவி.

''அப்பாவா?'' என்ற மகனிடம், ''ஆமாம்,'' என்று பாக்கெட்டிலிருந்த பேனாவை எடுத்து விளையாடக் கொடுத்தவாறே, ''கதையல்ல! அன்று பூங்காவில், இவனை நான் அறிந்துகொள்ளக்கூடாது என்று இவனைத் தனியே செல்ல விட்டுவிட்டு நின்றாயே! நித்தி, கேட் தாண்டி, சாலைக்கே சென்று விட்டான்! பையன் ஒருவன் ஓட்டி வந்த கார்...'' என்றவன் மகனை இறுக அணைத்தான். ''நல்ல வேளையாக நான் அங்கே இருந்தேன், அடி படாமல் தூக்கிக்கொள்ள முடிந்தது! மற்றப்படி... யோசி, வறட்டு வீம்புக்காக இந்த அளவுக்கு விட்டு விடுகிற உன்னைவிட, இவனது நலன் பற்றி,



எனக்கு அதிகமாகத் தெரியாதா?'' என்று அவளை நேராக நோக்கி வினவினான்.

'மற்றப்படி' என்ற ஒரு வார்த்தையில், மாதவி விதிர் விதிர்த்துப் போயிருந்தாள்.

''நித்தீ, நித்திம்மா! கண்ணு...'' என்று குரல் தழுதழுக்க, மகனை வருடியவளின் கைகள் நடுங்கின.

ஒரு கணம் தயங்கிவிட்டு, வலது கையால், அவள் தலையை வருடிக் கொடுத்தான் கிருபாகரன். ''பயப்படாதே! அவனுக்கு அடி படவே இல்லை!''

புரியாத சிறுமியாகக் கணவனை நோக்கியவளின் கண்கள் சட்டென அகன்றன.

தலையைச் சிலுப்பி அவனிடமிருந்து விலகியவள், வேகமாக அங்கிருந்து சென்று மறைந்தாள்.

நடந்ததைப் பெருமளவு கவனித்த கண்ணன், ''பிள்ளைக்காக வாவது, மாதவி கணவனை ஏற்பது நல்லது!'' என்றான் மனைவியிடம்.

''முன்பு மாதவி பட்ட துன்பம், உங்களுக்குத் தெரியாது! அதை நேரில் பார்த்தவள் நான். தயவு பண்ணி, இப்படி யோசியாமல் பேசாதீர்கள்!'' என்று எரிச்சலை ஓரளவு காட்டியவாறே, மனோகரி கூறினாள்.

''மனு, ப்ளீஸ்! நம் முதல் சச்சரவு இன்று தொடங்க வேண்டாம்! ஆண்டுக் கணக்கில் காத்திருந்தது! இன்றைய இரவை எதுவும் கெடுக்கக் கூடாது!'' என்றவன், மனைவியின் கன்னம் சிவப்பதை ரசித்து முறுவலித்தான்!

## 25



அன்றைய தினம் தொடங்கி, கிருபாகரன் மகனை விட்டு, முன்போல ஒதுங்கி இருப்பதாக இல்லை என்று, ஏதாவது ஒரு விதத்தில் காட்டிக்கொண்டே இருந்தான்.

கட்டாயமாக, ஒருமுறை அவனைப் பற்றி விசாரிப்பான்.

மாதவி பதில் சொல்லாமல் இருந்து பார்த்தாள். பொது நிர்வாகி, அல்லது அவரைப் போல யாரையாவது கூட வைத்துக் கொண்டே அவனிடம் பேசினாள்.

ஆனால், கிருபாகரன் எதையும் லட்சியம் செய்வதாக இல்லை.

''எனக்கு நித்திலனைப் பார்க்க வேண்டும். பூங்காவுக்கு அழைத்து வருகிறாயா? அல்லது, நான் உன் வீட்டுக்கே வரட்டுமா?'' என்று ஜிஎம் முன்னிலையிலேயே கேட்டான்.

ஓரளவு குடும்ப விவரம் தெரிந்த அவர், தானாகவே ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி விலகிக் கொண்டார்!

இவனிடம் நேரடியாகப் பேசியாக வேண்டிய நேரம் வந்துவிட்டதாக, மாதவிக்குத் தோன்றியது.

எனவே, அன்றைய அலுவல் தொடர்பான பேச்சுகள் முடிந்ததும், அவளாகவே ஒவ்வொரு வேலை கொடுத்து மற்றவர்களை அனுப்பிவிட்டு அவனை நிமிர்ந்து பார்த்தாள்.



அவளிடமிருந்தே வரட்டும் என்று எண்ணியவன் போல, கிருபாகரனும் அவளையே பார்த்தபடி, பேசாமல் அமர்ந்திருந்தான்.

தப்பு செய்தவன் - அதிலும் மன்னிக்கவே முடியாத மாபெரும் குற்றம் புரிந்தவன், எவ்வளவு அமர்த்தலாக உட்கார்ந்திருக்கிறான்? ஒரு தவறும் செய்த அவள் பதறுவானேன்?

பதற்றம்தான்! இன்னோர் இழப்பு நேர்ந்து விடுமோ, என்ற பதற்றம்!

ஆனால், அப்படியோர் இழப்பு நேர விடுவதற்கு, அவள் ஒன்றும், அன்றைய பேதை அல்லவே! நிமிர்ந்து போராட வேண்டாமா?

''நித்திலனை நீங்கள் பார்ப்பதோ, பேசுவதோ எனக்குப் பிடிக்கவில்லை!'' என்று மாதவி நேரடியாக விஷயத்துக்கு வந்தாள்.

''சாரி, மாதவி. இது விஷயத்தில், உன் விருப்பு வெறுப்புகளைப் பொருட்படுத்தும் நிலையில் நான் இல்லை! எனக்கு என் பிள்ளையோடு பழக வேண்டும்!'' என்றான் அவன் அமைதியாகவே!

''ஏன்?'' என்றாள் அவள் ஆத்திரத்தோடு. ''மூ.. ன்று! மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக, இப்படி ஒரு பிள்ளை இருக்கிறானா, இல்லையா என்று அறிகிற அக்கறைகூட இருக்கவில்லை! இப்போது மட்டும் என்ன, பாசம் பொங்கி வழிகிறது?''

அவளை ஒரு பார்வை பார்த்துவிட்டு, ''நீதான் தேடவே கூடாது என்று என்னென்னமோ எழுதியிருந்தாயே! அப்புறம்



எந்தத் தைரியத்தில் தேடுவது?'' என்று கேட்டான் கிருபாகரன், மெதுவாகத்தான்.

ஆனால், அவளுக்குக் கொதித்துக்கொண்டு வந்தது!

''ஆகா! என் வார்த்தைக்கு எவ்வளவு மதிப்பு! நான் கட்டளையிட்டு விட்டதால், அதை மீற மனமின்றி, நிம்ம.. மதியாகச் சும்மா இருந்து விட்டீர்கள், போல!'' என்றாள் குத்தலாக.

''அப்படி இல்லை! மனோகரியும் அன்று கிளம்பியிருந்தது தெரிய வந்தது! அவளுக்கு உலக அறிவும் தைரியமும் உண்டு. துணையாக அவள் உன்னோடு இருக்கும்போது, உன்னைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை என்று கருதினேன்!''

''அது மட்டுமா? வேண்டியது கிடைத்த பிறகு, அதை, அனுபவிக்காமல், மற்ற பயனற்ற சில்லரை விஷயங்களைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருப்பார்களா, என்ன?''

''ஒரு வகையில் நீ சொல்வதும் சரிதான். ஆனால், 'அனுபவிக்க' என்ற வார்த்தையைவிடச் 'சீரமைக்க' என்று சொல்வது பொருந்தும்! 'உடையவன் பார்க்காவிட்டால், ஒரு முழம் கட்டை!' என்பார்கள். பயிர்த் தொழில் பழமொழி! ஆனால், எல்லாவற்றுக்கும் பொருந்தும்! நம் ஜிஎம் எவ்வளவோ முயன்றபோதும், மற்றவர்களை உள்ளே விடப் பிரியமின்றி, எல்லாப் பொறுப்புகளையும் அவரே கவனித்ததாலோ, என்னவோ, மிஸ்டர் குமாரசாமி இறந்த பிறகு, நிறுவனத்தில் ஓர் அக்கறையின்மையும், சிறு ஊழல்களும் நடைபெறத் தொடங்கி விட்டிருந்தன. அவருக்கு அடுத்த நிலை என்ற பெயரில் 'டம்மி'யாக



இருந்தவருக்கு, எந்தவித அக்கறையும் இருக்கவில்லை! நிர்வாகத்தைச் சீர்ப்படுத்துவது, தொழிலை லாபகரமாக நடத்துவது என்று, முழு மூச்சுடன் அதில் ஈடுபட வேண்டியதாக இருந்தது!''

''மூ...ன்றரை ஆண்டுகளாகவா?'' என்றது, அவளது நம்பாத குரல்.

''இல்லை! ஆனால், எந்த உரிமையில் உன்னைத் தேடுவது? செய்த பிழை பெரியது! உன்னை எப்படியாவது கண்டு பிடித்தால்கூட, நீ என்னோடு வருவது நடக்கிற காரியம் அல்ல! கூடவே, நீ ஒரு மாதிரிப் பிடிவாதக்காரி! ஒரு வேளை, உன்னைத் தேடுவதை அறிந்து, கடிதத்தில் எழுதியது போல, நீ ஏதாவது செய்து கொண்டு விட்டால் என்கிற பயம் கொஞ்சம்! அத்தோடு, மனோகரி உன்னைச் சும்மா இருக்க விட மாட்டாள். ஏதாவது ஒரு வழியில், உனக்கு ஒரு புது வாழ்வு அமையச் செய்வாள் என்ற நம்பிக்கையும் இருந்ததால், அப்படியே இருக்கட்டுமே என்று எண்ணினேன்...''

மறைப்பதற்கு ஏதும் இல்லாததுபோலத் தங்கு தடையின்றி அவன் சொன்னதில், பல உண்மைகளும் இருந்தன. முக்கியமாக, மனோகரி தந்த ஊக்கம்தானே, மாதவியை மீண்டும் நிமிர வைத்தது? அத்தோடு, கிருபாகரனை அவள் மன்னித்து ஏற்பதும், நடந்திருக்க முடியாததுதான். அப்போது மட்டுமல்ல. இப்போதும்! ஏன், இனியுமே!

அவனைப் போலவே, உணர்ச்சி துடைத்த குரலில் அவளும் பேசினாள். ''கிட்டத்தட்ட சரியாகத்தான் கணக்கிட்டிருக்கிறீர்கள். அதேபோல, எல்லோருக்கும் நிம்மதி

யாக, இப்போதும், அப்படியே இருக்க வேண்டியது தானே?''

''முடியவில்லை! இப்போது, நம் இருவரையும் பற்றி, நான் பேசுவதில் பயன் இராது! எனவே, அதை விட்டு விடுவோம். ஆனால், உன்னைப் பார்த்த பிறகு, குழந்தை பற்றிய எண்ணம் உள்ளே குறுகுறுத்துக்கொண்டே இருந்தது! அவனையோ, நீ என் கண்ணில் கூடக் காட்டுவதாக இல்லை! நீ வர வேண்டாம் என்று சொல்லாமல் சொன்ன பிறகும், அவனைப் பார்ப்பதற்காகவே, கண்ணனின் திருமண வரவேற்புக்கு வந்தேன்! நித்தியைப் பார்த்த பிறகு, அன்று யாரோ என்று தூக்கியபோதே, ஒரு பரவசம் இருந்தது! பலமுறை தூங்குமுன் அவன் நினைவு வரும்! இந்த வயதுதான் என் குழந்தைக்கும் என்று நினைத்தபடியே உறங்கியிருக்கிறேன்! அவனேதான் என் மகன் என்று தெரிந்த பிறகு... நியாயமான உரிமை இருக்கிறதோ, இல்லையோ, என்னால், அவனை விட முடியாது, மாதவி! தயவு செய்து புரிந்துகொள்!''

''உரிமை பற்றி, உங்களாலேயே உறுதியாகச் சொல்ல முடியவில்லையே! ஆனால், எப்படிச் சொல்ல முடியும்? அவனுக்கு விலையாகக் கம்பெனிப் பங்குகளை எடுத்துக் கொண்ட பிறகு...''

முதல் முறையாக முகத்தில் உணர்ச்சியைக் காட்டி, ''போதும்!'' என்று கை உயர்த்திச் சொன்னான் கிருபாகரன். ''எத்தனை தடவை, இதையே பேசுவாய்? எண்ணி எண்ணி, ஆயிரம் ஆயிரம் முறை நானாகவே நோவது போதாதா? இன்னும் என்ன செய்ய வேண்டும்? சொல்லு. செய்கிறேன்!''



நிஜமாகவே தவிக்கிறானா? அல்லது, உண்மை போல நடிக்கிறானா? நடிப்புதான் இவனுக்குக் கை வந்த கலை ஆயிற்றே! என்...னமாய்.. நடித்தவன்!

மனம் கற்பாறையாக இறுக, ''ஒன்றும் இல்லை!'' என்று லேசாகத் தோளைக் குலுக்கினாள் மாதவி.

''இல்லை! இருக்கிறது! அந்தப் பங்குகளைத் தந்து விட்டால், என் மகனைப் பார்க்க விடுகிறாயா?''

உதட்டைப் பிதுக்கினாள் மாதவி, ''சொத்துக்காகப் பிள்ளையை ஏலம் விடுகிற பழக்கம் எனக்குக் கிடையாது!''

அம்பு தவறாமல் இலக்கில் பாய்ந்துவிட, ஒரு வினாடி, அவன் வலியில் தடுமாறி விட்டான்! உடனேயே, ஓரளவு சமாளித்து, ''செத்த பாம்பை எத்தனை முறை அடிப்பாய், மாதவி? கையில் கிடைத்த சொர்க்கத்தைக் கைநழுவ... அப்படிக்கூடச் சொல்ல முடியாது! என் சொர்க்கம் கைக்குக் கிடைத்தபோது, அதன் பெருமை தெரியாமல் தூக்கி எறிந்து விட்டேனே என்று எப்படித் தவிக்கிறேன், தெரியுமா? ப்ளீஸ்! கொஞ்சம் புரிந்து கொள், மாதவி!'' என்று கெஞ்சுதலாக முடித்தான்.

இப்போதும், அவளால் நம்ப முடியவில்லை! நம்பப் பிடிக்கவுமில்லை! அதை நேரடியாகவே சொன்னாள்!

''உங்கள் வார்த்தையை எப்படி நம்புவது? உங்களது இந்த உருக்கம் முழுவதுமே, குழந்தையைப் பிடித்தால், மீண்டும் நிறுவனம் கைக்கு வரக்கூடும் என்பதற்காக இருக்கக்கூடுமே! நடிப்பில் நீங்கள் எப்படிப்பட்ட மாமன்னன்



என்று அனுபவத்தில் அறிந்தவள் நான் என்பது மறந்து விட்டதா? ஊகூம்! உங்களை நான் நம்ப மாட்டேன். நித்தியோடு பழக அனுமதிக்கவும் மாட்டேன்! எனவே அவனை மறந்துவிடுங்கள்!'' என்றாள் அவள் தீர்மானமாக!

மறுப்பாகத் தலைசயைத்தான் கிருபாகரன். ''அவனை மறப்பது சாத்தியமில்லை, மாதவி. நித்தி எனக்குக் கட்டாயம் வேண்டும்! அவனுக்காக, நான் கோர்ட்டுக்குக் கூடப் போகத் தயாராக இருக்கிறேன்!'' என்றான் அவனும் உறுதியாகவே!

மிரட்டலா? நீயாக விவாகரத்து தராவிட்டால், கோவிலில் தாலி கட்டி அவளோடு வாழ்வேன் என்றானே! அது போல அடுத்ததா?

அன்று கலங்கித் தவித்து விலகிப் போன நினைவில், உள்ளம் கூசியது!

''இன்னொருத்தியோடு வாழ்கிறவரிடம் பிள்ளையைக் கொடு என்று, எந்தக் கோர்ட்டும் சொல்லாது!'' என்றாள் அவள் சுள்ளென்று!

''என்னிடமே நித்தியைக் கொடுத்துவிட வேண்டும் என்று, நான் ஒரு போதும் கேட்கவில்லையே! அத்தோடு, யாருடனும் நான் வாழவுமில்லை!''

''இதை நம்ப, நான் இன்னமும் முட்டாள் அல்ல! அப்போது, இரண்டாண்டுக் காதலைக் காரியவாதியாக, அடியோடு ஒதுக்கி வைத்தவர்தானே! அதுபோல, இப்போதும் அவனை ஒளித்து வைத்திருப்பீர்கள். காரியம் முடிந்ததும், புற்றிலிருந்து



பாம்பு கிளம்புவதுபோல, ஏதாவது கிளம்பும்! எனவே. உங்களை நம்புவது, இனி முடியாத காரியம்!'' என்று முடித்தாள் மாதவி!

## 26



கிருபாகரன் மாதவியை அதிகமாக மறுத்துப் பேசவில்லை! பேசிப் பயன் இராது என்று புரிந்திருந்தான் போலும்!

''எனது இன்றைய வாழ்வில் அப்படி எதுவும் இல்லை, மாதவி. ஆனால், என் வார்த்தையை அப்படியே ஏற்பது உனக்குக் கடினம் என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். எனவே, அந்தப் பேச்சும் பேச வேண்டாம்! ஆனால், என்னால், நித்திலனைப் பாராமல் இருக்க முடியாது... ப்ளீஸ், நான் சொல்வதைக் குறுக்கிடாமல் கேட்டு முடித்துவிட்டு, அப்புறம் பேசு. நித்திலனின் வாழ்விலும், நான் அதிகப் பங்கு கேட்கவில்லை! வாரத்தில் ஒரு நாள்! ஒரு சில மணி நேரம்! அவ்வளவே! அவனோடு இருந்துவிட்டுப் போய்விடுகிறேன்! இதற்கு நீயும் ஒத்துக் கொண்டால், எல்லாம் சுமுகமாகப் போய்விடும்! மறுத்தால், கோர்ட் வரை சென்றேனும் இந்த அனுமதியை நான் பெற்று விடுவேன்! இது நிச்சயம்! இந்த அனுமதியை எந்த நீதிமன்றமும் மறுக்காது. எனவே, நான் எந்த வழியில் செல்வது என்று யோசித்து, நாளைக்கு முடிவு சொல்லு!'' என்று கூறிவிட்டு எழுந்து சென்றான் அவன்.

மறுநாள் வந்து, ''என்ன முடிவு செய்தாய்?'' என்று கேட்கவும் செய்தான்.

அவளுக்கு மறுக்க முடியாத நிலை! அவன் சொன்னது போலக் கோர்ட்டுக்குப் போனால், அவளிடம் அவன் கேட்ட சில மணி நேரத்துக்குப் பதிலாக, வாரத்தில் ஒரு முழு நாளையேகூட, நீதிமன்றம் அவனுக்குக் கொடுத்து விடக் கூடும்! அதற்கு, இது மேல்! நஷ்டத்தில் லாபக் கணக்கு!

அவனுக்குப் பதிலாக, அலுப்புடன் உச்சுக் கொட்டினாள் அவள். ''நீதி மன்றத் தீர்ப்பு என்னவாக இருக்கும் என்று, யாராலும் சொல்ல முடியாது! ஆனால், கோர்ட், அது இதென்று போக நேர்வது, இந்த வயதில் என் மகனைப் பாதிக்கக் கூடும்! அதைப் பற்றி, நீங்கள் லட்சியம் செய்யாதபோதும், பெற்றவள் எனக்கு அந்தக் கவலை இருக்கிறது! அதனால்தான்!'' என்று வெறுப்பை மறையாத குரலில் கூறினாள்.

முகம் மலர, ''எனக்கும் அந்தக் கவலை இருந்தது, மாதவி! ஆனால், நீ அந்த அளவுக்குப் போக விட மாட்டாய் என்ற நம்பிக்கையும் இருந்தது! எப்படியோ! மிகவும் நன்றிம்மா! நான் எப்போது நித்திலனைப் பார்க்க வரட்டும்?'' என்று ஆவலோடு வினவினான் கிருபாகரன்.

''சனிக்கிழமை மாலையில் நான் ஷாப்பிங் போவது வழக்கம்! அந்த நேரத்தில் வைத்துக் கொள்ளுங்கள்!'' என்றாள் அவள். ''ஐந்தரையிலிருந்து ஏழு. ஏழரை மணி வரை!''

நான் வீட்டில் இல்லாத நேரத்தில் வந்து பிள்ளையைப் பார்த்துவிட்டுப் போய்விடு. ஏனென்றால், உன்னைப் பார்க்க எனக்குப் பிடிக்கவில்லை என்று அவள் சொல்லாமல் சொன்னதை, அவனும் புரிந்து கொண்டான்.



உணர்ச்சி துடைத்த முகத்துடன், ''உன் விருப்பம்!'' என்றான் அமைதியாக!

''என் விருப்...'' என்று கோபத்துடன் தொடங்கிய மாதவி, உடனேயே தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள். ''நான் நினைத்ததே நியாயம், அதுவே நடக்க வேண்டும் என்றில்லாதபடி, நித்திலனை நான் கொஞ்சம் கண்டிப்பாக வளர்க்கிறேன். அதனால், பாசம் காட்டுவதாக எண்ணிக்கொண்டு, அவன் கேட்பதையெல்லாம் வாங்கிக் கொடுத்து, அவனைக் கெடுத்து விட வேண்டாம்! சாக்லேட், ஐஸ்க்ரீம், பாட்டிலில் அடைத்த குளிர்பானங்கள் எதுவும் பழக்கம் காட்ட வேண்டாம்! அவனுக்கு நல்லதில்லை. மற்றப்படி...''

என்று தோளைக் குலுக்கி, மீண்டும் உச்சுக் கொட்டினாள் மாதவி!

''கவனித்துக் கொள்கிறேன்!'' என்றான் அவனும். ''நீ உன் காவலாளியிடம் சொல்லி வைத்துவிடு! அவன் என்னை உள்ளே விட வேண்டும் அல்லவா?

அவள் பதிலே சொல்லவில்லை.

ஃபைலைத் தீவிரமாகப் பார்ப்பதாகக் காட்டிக் கொள்வதைக் கவனித்தவனின் முகம் சட்டென இளகியது. ஒரு கணம் அவளது குனிந்திருந்த தலையைப் பார்த்துக் கொண்டு நின்றவன், ஓர் ஓசையற்ற பெருமூச்சுடன் அங்கிருந்து வெளியேறினான்!

சனிக்கிழமையன்று, வழக்கத்துக்கு விரோதமாகக் கடை கண்ணிகளில் எதை வாங்கவும் மாதவிக்குத் தோன்றவில்லை! 'பார்க்கிங்'கில் காரை நிறுத்திவிட்டு, அதிலேயே



உட்கார்ந்திருந்தாள். மனம் வீட்டிலேயே நின்று, சண்டித்தனம் செய்தது!

இந்நேரம், கிருபாகரன் வீட்டுக்கு வந்திருப்பான், நித்திலனோடு கொஞ்சி விளையாடிக் கொண்டிருப்பான்! மனோகரியின் திருமணத்தின்போது போலத் தோளில் அணைத்தாற்போலத் தூக்கி வைத்திருப்பான்... ஆனால், நித்தி எப்படி அவனிடம் ஒட்டிக் கொள்ளலாம்? ஆபத்தில் காப்பாற்றிய நன்றியுணர்வா? அல்லது, தந்தை என்ற இயற்கைப் பாசமா?

என்றேனும், தாயிடம் உள்ள பாசத்தைவிட, அது அதிகமாகி, அப்பாவிடம் போகிறேன் என்று அவன் சொல்லிவிட்டால்?

அப்புறம் எப்படி உயிரோடு இருப்பது?

ஒருவேளை, கிருபாகரனின் திட்டமும் அதுதானோ?

அவளை நோகடித்துச் சாகடித்து, நிறுவனத் தலைமையை மீண்டும் கைப்பற்றுவது?

கட்டுப்பாடிழந்து, மனம் கிறுக்குத் தனமாக யோசிப்பதை அவளே உணர்ந்து, தலையை உலுக்கி விட்டுக் கொண்டாள்.

சும்மா இருந்தால், இன்னும் பைத்தியக்காரத்தனமாக யோசனை ஓடும் என்று உணர்ந்து, வாங்க வேண்டிய பொருட்களின் பட்டியலை எடுத்துக்கொண்டு, அந்தப் பெரிய பல்பொருள் அங்காடிக்குள் மாதவி சென்றாள்.

அதிகப்படி என்று சொல்லும் விதமாகக் கிருபாகரன் எதையும் செய்திருக்கவில்லை!



பீட்சா வாங்கி வந்து, பிள்ளையோடு சேர்ந்து சாப்பிட்டிருக்கிறான், மகனோடு, தோட்டத்தில் கிரிக்கெட் விளையாடியிருக்கிறான். நித்திலனை, முதுகில் உப்பு மூட்டை தூக்கிக் கொண்டு, வீட்டைச் சுற்றியிருக்கிறான்., மடியில் வைத்துக் கதை சொல்லியிருக்கிறான்! பாட்டரியில், கரணம் போட்டுத் துள்ளிக் குதிக்கும் நாய்க்குட்டிப் பொம்மை ஒன்று! அவ்வளவே!

இதில், எதைக் குற்றம் சொல்வது?

எதையும் தாயிடம் பகிர்ந்து கொள்ளும் பழக்கத்தில், நித்திலன் தந்தையைப் பற்றிச் சொல்லச் சொல்ல, அவனை அதட்டி வாயை மூடச் செய்யாமல் அமைதி காப்பது மாதவிக்குப் பெரும் பாடாக இருந்தது!

''அப்பாவும் நானும் சேர்ந்து, உனக்கும் பீட்சா வச்சிருக்கோம்மா! ஆ காட்டு!'' என்று தன் சின்னக் கையால் பீட்சாவை எடுத்து ஊட்டியபோது, தொண்டையில் அடைத்தபோதும், சிரித்த முகமாக அதை விழுங்கியாக வேண்டிய கட்டாயம் வேறு!

அப்பா! அப்பா! அப்பா!

இரவு தூங்குமுன் கதை வாசிக்கும்போதுகூட, ''அப்பாவும் நல்லாக் கதை சொன்னாங்கம்மா! நல்ல அப்பா!'' என்றான் குழந்தை!

உறங்கும்போதும், கிருபாகரன் வாங்கிக் கொடுத்த நாய்ப் பொம்மையைத் தொட்டுக் கொண்டிருந்தான்!

தூங்கிவிட்ட மகனின் கள்ளமற்ற முகத்தில் படர்ந்திருந்த இளம் புன்னகையைப் பார்க்கையில், மாதவிக்குக் கண்ணைக் கரித்துக்கொண்டு வந்தது!

''இதே மாதிரிதான், நானும் ஒரு காலத்தில், உன் தந்தையைத் தவிர, வேறு நினைவே இல்லாமல் இருந்தேனடா! ஆனால், என்னமாய் அடி பட்டுப் போனேன், தெரியுமா?'' என்று முணுமுணுத்தவள், பழைய நினைவுகளில், வெகுவாகத் துடித்துப் போனாள்!

தூக்கமின்மையும் கண்ணீருமாகச் சிவந்து வீங்கியிருந்த கண்களுக்கு முடிந்தவரை வைத்தியம் செய்து கொண்டுதான், மாதவி அலுவலகத்துக்குச் சென்றது.

ஆயினும், அன்றாட ஆலோசனைக் கூட்டம் முடிந்து, பொது நிர்வாகியை முன்னே போகவிட்டுப் பின் தங்கிய கிருபாகரன், ''சாரி, மாதவி!'' என்றான் தணிந்த குரலில்!

அவன் வருத்தம் தெரிவித்ததே ஆத்திரமூட்ட, ''பெண்கள் சைக்கிளுக்குச் சேலை, துப்பட்டா மாட்டிக் கொள் ளாமல் வைக்கும் தடுப்புக்கு ஒரு புது டிசைன் சொல்லி இருந்தேனே! அது என்ன ஆயிற்று? டிசைன் பிரிவில் வேலை நடக்கிறதா இல்லையா என்று நீங்கள் பார்க் கவே இல்லையா? போங்கள்! போய், முதலில் அதைப் பாருங்கள்!''

என்று காய்ந்தாள்.

ஆனால், மாதவி என்ன காய்ந்தாலும், எரிந்து விழுந் தாலும், கிருபாகரனிடம் அதற்கு எந்தவிதப் பிரதிபலிப்பும் இருக்கவில்லை! அவன் வருத்தம் தெரிவித்ததும் வாய் வார்த்தைதானே தவிர, வாரம் ஒரு முறை மகனைப் பார்க்க வருவதை, அவன் நிறுத்தவும் இல்லை!



இந்நிலையில், மனோகரியும் கண்ணனும், தேனிலவை முடித்துக்கொண்டு, கோவை சென்றுவிட்டு, சென்னைக்கு வந்து, குடித்தனம் செய்யத் தொடங்கினார்கள்!

நித்திலன் தன் இளங்குரலில் 'அப்பா'வைப் பற்றிப் பெருமையடிக்கவும் மனோகரி திகைத்தாள்.

கணவனும் மனைவியும், மாதவியை வியப்பும் கேள்வியுமாக நோக்க, அவள் விவரம் தெரிவித்தாள்!

''இவ்வளவு நடந்திருக்கிறது! என்னிடம் ஒரு வார்த்தை சொல்லவில்லையே!'' என்றாள் மனோகரி குறையோடு!

''சீ! என்னப்பா, தேனிலவில் கூடவா தொல்லை செய்வது? கண்ணண்ணன் டெலிஃபோனைத் தூக்கித் தூர எறிந்திருப்பார்!'' என்று சிரித்தாள் மாதவி.

''ஐயோ, அவ்வளவு தைரியம் எனக்கு ஏதும்மா!'' என்று கண்ணன் பயந்தவன் போல நடிக்க, ''அதெல்லாம் மாட்டார்! நீ என்றால், எங்கள் இருவருக்குமே தனிதான்!'' என்றாள் அவன் மனைவி.

''அத்தோடு, நானும் பெரிய ஆளாக வளர்ந்து விட்டேன் அல்லவா? நிறுவன நிர்வாகம் எல்லாம் பார்க்கிறேன்! இதைச் சமாளிக்கத் தெரிய வேண்டாமா?''

''என்னத்தைச் சமாளித்தாய்? கிருபாகரை வீட்டுக்குள் வர விட்டு விட்டாயே! அவருக்குக் கொஞ்சம் இடம் கொடுத்தால், என்ன ஆகும் என்று தெரியாதா? தின மும், அலுவலகத்தில் பார்த்துப் பேசுவது போதாதா என்று, மன்னன் வீட்டிலும் காட்சி தரத் தொடங்கி விட்டா ராக்கும்?''



''அப்படி ஏதும் கிடையாது, மனோ! வீட்டில் நான் அவரைச் சந்தித்ததே இல்லை! சனிக்கிழமை, நான் ஷாப்பிங் போகிற நேரத்தில்தான், அவர் வீட்டுக்கு வருவது! அவரது கார் திரும்பிச் சென்ற பிறகுதான் நான் வீட்டுப் பக்கம் திரும்பி வருவதே!''

மனோகரி விசித்திரமாகத் தோழியைப் பார்த்தாள். ''கிருபாகரன் உன் வீட்டுக்குள் புகுந்தது மட்டும் அல்ல! அந்த நேரத்தில், உன்னை வீட்டை விட்டு வெளியே வேறு துரத்தி விட்டாரே! மெய்யாகவே, மனிதர் கெட்டிக்காரர்தான்!'' என்று மனோகரி கூற, மாதவி திகைத்தாள்.

அப்படித்தானா?

## 27



இனிமையே உருவானவளான தன் தோழி, மீண்டும் கிருபாகரனிடம் ஏமாந்து போய்விடக் கூடாதே என்று மனோகரி மிகவும் கவலைப்பட்டாள்! ஒரு முறை மாதவி பட்ட துன்பம், இந்தப் பிறவிக்கு மட்டுமின்றி, இன்னும் பல பிறவிகளுக்கும் போதுமானது என்பது, அவளது கருத்து!

சைக்கிள் நிறுவனத்தில், கிருபாகரனுக்குப் பதவி கொடுத்தது பற்றிய மாமனாரின் கருத்து, அவளுக்கும் ஏற்புடையதாகவே இருந்தது!

அலுவல் அறையில் கிடக்கும் மேஜை, நாற்காலி போல, கிருபாகரனையும், மாதவி சர்வ சாதாரணமாக எண்ணப் பழக வேண்டும் என்றுதான் அவளும் நினைத்தாள்!



ஆனால், அவன் அவளது வீட்டுக்கே வரத் தொடங்கி விட்டானே!

ஒன்று, அவனை வரக்கூடாது என்று, மாதவி தடுத்திருக்க வேண்டும்!

கோர்ட், அது இது என்று அலைந்து, நித்தி மனம் கலங்கிவிடக் கூடாதே என்று மாதவி சம்மதித்தாள் என்றால், அவளது பலவீனம் புரிந்து, கிருபாகரன் செயல்படுகிறான் என்றுதானே அர்த்தம்?

'பிள்ளை, பிள்ளை' என்கிறாயே, அந்தப் பிள்ளை மனம், இந்தக் களேபரத்தில் கலங்குமே என்று உனக்குக் கவலை யில்லையா என்று, அவனைக் கேட்டிருக்க வேண்டாமா?

அதைத்தான் விட்டு விட்டாள் என்றாலும், கிருபாகரன் வரும்போது, தைரியமாக அவனை எதிர்கொண்டு, பேச்சிலேயே நாலு குத்துக் குத்தி, அங்கே வரத் தயங்கும் நிலைக்கு அவனை விரட்டாமல், அவள் அல்லவா, வீட்டை விட்டு வெளியே ஓடுகிறாள்!

இதுதான் மனோகரியைப் பெரிதும் உறுத்தியது!

இது எங்கே போய் முடியக்கூடும்?

மாதவி முன்னர் பட்ட வேதனையின் நினைவில், அந்த உண்மைத் தோழியின் நெஞ்சு கலங்கியது!

கோவைக்குச் சென்றதால்தான் கண்ணனைச் சந்தித் தாள் என்றாலும், அதற்காகக் கூடத் தன் தோழியின் துன்பத்தைப் போகிறது என்று ஒதுக்க அவளால் முடிய வில்லை! பேசாமல், வேறு எங்கேனும் போயிருந்தால்,

மாதவிக்கு, இந்தத் துன்பம் நேர்ந்திராதே என்றே, அவள் கலங்கினாள்!

உண்ணாமல், உறங்க முடியாமல், எவ்வளவு வேதனை! அந்த வதை மீண்டும் மாதவி அனுபவிப்பதா? எப்படித் தடுப்பது?

யோசித்தபடியே நடந்து கொண்டிருந்த மனோகரி, அந்த யோசனைக்குக் காரணமானவனே எதிரே வரவும், சற்றுத் திகைத்து நின்றாள்.

புதிய வீட்டுக்காகச் சில பொருட்கள் வாங்க வந்திருந்தாள் மனோகரி.

மறுநாள் சந்திக்க இருக்கும் மகனுக்காக ஏதாவது வாங்க வந்திருந்தான், கிருபாகரன்.

மனோகரியைப் பார்த்ததும், நின்று முறுவலித்தான்! "என்ன, தேனிலவுச் சொர்க்கத்தை விட்டுத் திரும்பி வர முடிந்ததா?" என்று சிறு கேலியாகக் கேட்டான்!

என்ன இயல்பாகப் பேசுகிறான்! இவனுள்ளே ஒரு கொடூரம் இருந்ததைச் சொன்னால்கூட, யாரும் நம்ப மாட்டார்களே!

பதிலுக்குச் சின்னதாகப் புன்னகை செய்து, "'மனம் கொண்டது மாளிகை! சொர்க்கத்தை வீட்டிலேயே அனுபவித்துக் கொள்ளலாம் என்று திரும்பி வந்து விட்டோம்!" என்றாள் மனோகரி! கூடவே தலை சரித்து நோக்கி, "ஆனால், சில பேருக்குத்தான், கோடி தனத்தைக் கையில் கொடுத்தாலும், கண்டுகொள்ளக் கூடத் தெரிவதே இல்லை!" என்றாள் ஜாடையாக!



அவன் முகத்தில் மாறுதல் இல்லை! ஆனால், "அதற்கும் கொடுத்து வைத்திருக்க வேண்டும் அல்லவா?" என்று கிருபாகரன் கேட்டபோது, அவளுக்குத்தான் கொஞ்சம் மனம் கனத்த மாதிரி இருந்தது!

இல்லை! இவன் பொல்லாத நடிகன்! நிஜம் மாதிரியே காட்டி விடுவான்!

"உண்மை!" என்றாள், மனோகரி - குரலில் சற்று அதிகப்படி அழுத்தம் கொடுத்து. ஓரக் கண்ணால் அவனைப் பார்த்து, "ஒரு கதை கூட உண்டே! பரம ஏழை ஒருவன், ரொம்பவும் கஷ்டப்பட, மகாலக்ஷ்மிக்கு அதைப் பொறுக்க முடியவில்லையாம்! அவன் செய்த பாவத்தின் தண்டனை என்று திருமால் சொன்னதையும் கேளாமல், அந்த ஏழைக்கு உதவி செய்யும் எண்ணத்தோடு, அவன் செல்லும் வழியில் தங்கக் கட்டிகளைப் போட்டு வைத்தாளாம்! ஆனால், அப்போது பார்த்து, நடந்து நடந்து அலுத்துப்போன அந்த ஏழை, கொஞ்ச தூரம் கண்ணை மூடிக்கொண்டு நடக்கத் தீர்மானித்து, அப்படியே நடந்தானாம்! தங்கக் கட்டிகள் காலில் தட்டியபோதுகூட, நான் ஒரு முடிவு செய்துவிட்ட பிறகு, கல்லும் கட்டியும் காலில் தட்டினால் கண்ணைத் திறந்து விடுவேனா? கண்ணைத் திறவாமலே, கவனமாக நடப்பேன் என்று, காலால் தேய்த்துத் துழாவி, தங்கக் கட்டிகளைக் காலாலேயே ஒதுக்கி விட்டுப் போனானாம், அந்தப் புத்திசாலி! கொடுத்து வைப்பது பற்றி, எவ்வளவு அருமையான கதை, பாருங்கள்!" என்றாள், கிண்டலாக.

சன்னமாய் முறுவலித்தான் கிருபாகரன். "இந்தக் கதைக்கு, இன்னும் ஓர் அழுத்தமான முடிவுகூட, உண்டே! அந்த ஏழை,



இன்னும் ரொம்பத் தூரம் நடந்து நடந்து அலுத்துப்போய், மகாலட்சுமிக்கு மிகவும் கல் மனது என்று திட்டினானாம்! மகாலட்சுமி தோன்றி, சற்று முன் நடந்ததைச் சொல்லி மறைந்தாளாம்! அப்போது, அவனுக்கு எப்படி இருந்திருக்கும்?" என்று கேட்டவன், தானே பதிலையும் சொன்னான்!

"அச்சு அசல் என்னைப் போலவேதானே இருந்திருக்கும்?" என்று அவன் கேட்கவும், பதில் சொல்ல முடியாமல், மனோகரிக்கு வாயடைத்துப் போயிற்று!

அவள் பேசாமல் பார்த்துக்கொண்டு நிற்கவும், "உப்பைத் தின்றால், தண்ணீர் குடித்துத்தானே ஆக வேண்டும்? இதையெல்லாம் யோசித்து, வீணே உங்கள் மகிழ்ச்சியைக் கெடுத்துக் கொள்ள வேண்டாம், சகோதரி!" என்று விட்டுப் போனான், அவன்!

'உப்பைத் தின்றதை' ஒத்துக் கொள்கிறானே! அதை விடவும், தண்டனையை நியாயம் என்று கிருபாகரன் ஏற்பதுதான், அவளை மிகவும் பாதித்தது!

வெகுவாக யோசித்துவிட்டு, மாதவியிடம் இந்த நிகழ்ச்சியைச் சொன்னாள் மனோகரி. "அவரே நொந்திருப்பது போலத் தோன்றுகிறது, மது!" என்று, தன் அபிப்பிராயத்தையும் தெரிவித்தாள்.

அலட்சியமாக உச்சுக் கொட்டி, "அப்படி நடித்திருப்பார், மனோ!" என்று முடித்தாள் மாதவி.

சும்மா இருக்க முடியாமல், கணவனிடமும் மனோகரி இது பற்றிக் கூறினாள்.



மனைவியின் கருத்தை ஒத்துக் கொண்டதோடு, "நிறுவனக் கூட்டத்தின்போது, கிருபாகரின் முகம் மாறியது பற்றித்தான், நான் அப்போதே சொன்னேனே!" என்று சான்றும் உரைத்தான்.

"ஆனால், முன்பு நடந்ததை எண்ணி, எனக்கே அவரை நம்பப் பயமாக இருக்கிறதே!" என்றாள் மனோகரி, கவலையுடன்.

"ஆராய்வோம்!" என்று அவளைத் தட்டிக் கொடுத்தான் கண்ணன். "நல்ல துப்பறியும் நிறுவனத்திடம் பொறுப்பைக் கொடுத்து, வினாடி விடாமல், கிருபாகரனைக் கண்காணிப்போம்! ஆள் எப்படி என்று, அப்போது புரிந்துவிடும்!" என்றான் உற்சாகமாக!

ஆனால், மனோகரியின் முகம் தெளியவில்லை!

"என்னடா?" என்று கண்ணன் கேட்கவும், "கிருபாகரன் விஷயத்தில், இது அவ்வளவாகச் சரிப்படாது, கண்ணன். மதுவின் பழைய கதை சொல்லியிருக்கிறேன் அல்லவா? மதுவை வளைக்கத் திட்டம் போட்டதிலிருந்து, அந்தப் பெண் சுபி... அப்போது அவருடைய இரண்டாண்டு காலக் காதலியாம் - அவளுடன் டெலிஃபோனில் கூடத் தொடர்பு கொள்ளாமல் இருந்திருக்கிறார்! அந்தத் தொடர்பை அறிந்தவர்களிடம் இருந்தும் விலகி விட்டார்! இப்போதும் அதே போல ஏதாவது செய்து கொண்டிருந்தால், எப்படிக் கண்டுபிடிப்பது? இன்னொரு தரம், அந்தத் துன்பம் மாதவி தாங்க மாட்டாள், கண்ணன்! செத்து விடுவாள்!" என்றாள் மிகுந்த கவலையும் கலக்கமுமாக, அவள்.

''அனாவசியமாக, மனதைப் போட்டு வருத்திக் கொள்ளாதே, மனு! கிருபாகரன் அப்படிப்பட்டவர் என்றால், அதற்குத் தகுந்த ஏற்பாடு செய்வோம். மாதவியைப் பிரிந்ததில் இருந்தே, அவரது நடவடிக்கைகளைப் பற்றி விசாரிக்கச் செய்வோம்! இன்றைய நிலைமைக்காக, அன்றிலிருந்தே, அவர் தன்னைத் தயார்ப் படுத்திக்கொண்டிருக்க முடியாதல்லவா? இலகுவாகக் கண்டுபிடித்துவிடலாம்!'' என்று கண்ணன் கூறவும், மனோகரி ஓரளவு ஆறுதலுற்றாள்.

''இப்போதுதான் கொஞ்சம் நிம்மதியாக இருக்கிறதுப்பா!'' என்று கணவன் தோளில் சாய்ந்தாள் அவள்.

ஒன்றிற்கு இரண்டு துப்பறியும் நிறுவனங்களின் மூலமாக விசாரித்தும், கிருபாகரனைப் பற்றிய தவறான தகவல்கள் எதுவும் கண்ணனுக்கு வரவில்லை.

மாதவியைப் பிரிந்த சமயத்தை ஒட்டி, ஒரு பெண்ணை நாலைந்து தரம் அவன் சந்தித்ததற்கு ஆதாரம் இருந்தது! அதை அவன் மறைத்துச் செய்ததாகவும் இருக்கவில்லை! பெரிய நட்சத்திர ஹோட்டலுக்குத்தான் அழைத்துச் சென்றிருக்கிறான்!

பிறகு, அது நின்றுவிட்டது! பிறகு, வீட்டிலும், வெளியேயும் சில தடவை அவளோடு காணப்பட்டிருக்கிறான்!

ஆனால், இது எல்லாமே, மாதவி சென்னையை விட்டுக் கிளம்பிய சமயத்தை ஒட்டித்தான்! அதற்கு, ஓரிரு வாரங்கள் முன்னும் பின்னும் இருக்கலாம்!

அதற்குப் பிறகு, கிருபாகரனின் வாழ்வில் எந்தப் பெண்ணும் இடம் பெறவில்லை! சந்தேகத்துக்குரிய எதுவும் நடந்ததாகத் தெரியவும் இல்லை!



இதற்கிடையே, கிருபாகரனை மனோகரி அடுத்து சந்தித்தது, ராமகிருஷ்ணா மிஷன் நடத்திய இலவச மருத்துவ முகாம் ஒன்றில்!

விரும்பி ஏற்றிருந்த நர்ஸ் பணியை, வருமானத்துக்காகச் செய்யாதபோதும், வசதியற்றவர்களுக்கு உதவி செய்வதற்காக நடத்தப்படும் மருத்துவ மனைகளிலும், அவை ஏற்பாடு செய்யும் இலவச மருத்துவ முகாம்களிலும், மனோகரி இலவசப் பணி செய்யத் தொடங்கியிருந்தாள்.

அங்கே, கிருபாகரனைக் கண்டது, அவளுக்கு முதலில் ஆச்சரியமும், பிறகு அதிர்ச்சியுமே! அவனுக்கு எந்த விதத்திலும் சம்பந்தம் அற்ற இடத்தில் கண்டு வியந்தவளுக்கு, உடனேயே, அவன் மாதவியை முதியோர் இல்லத்துக்கு அழைத்துச் சென்றது நினைவு வந்துவிட்டது!

மனோகரியின் பேச்சுக்கு, மாதவி மதிப்புக் கொடுப்பாள் என்பதால், பழைய தந்திரத்தையே இப்போதும் கையாளுகிறானா? ஆனால், ஒரே மாதிரியாக இரண்டு தடவை ஏமாறுவார்களா என்று எண்ணிப் பார்க்க மாட்டானா?

அங்கே எல்லோருக்கும் அவன் பழக்கமானவனாக இருந்ததுகூட, அவளுக்குத் திருப்தியைத் தரவில்லை! முன்பும் அப்படித்தானே நடந்தது?

இரண்டொரு முறை கவனித்துவிட்டு, கணவனிடம் அவள் இது பற்றிக் கூறவும், அவன் துப்பறியும் நிறுவனங்கள் மூலம் மேலும் விசாரிக்க, மூன்று ஆண்டுகளாகவே, இந்த மாதிரிப் பணிகளிலும் கிருபாகரன் தொடர்ந்து ஈடுபட்டிருப்பது தெரிய வந்தது!



அத்தோடு, இப்போது அவன் நடந்துகொள்ளும் முறையும், கணவன் மனைவி இருவருக்குமே திருப்தியைத் தரவே, மனோகரி, மாதவியிடம் கிருபாகரனைப் பற்றிய பேச்சை மீண்டும் எடுத்தாள்.

''அலுவலகத்தில்தான் அவரைப் பார்த்தாக வேண்டிய தலைவிதி! வீட்டிலும், நித்தியின் பேத்தல் வேறு! கொஞ்சமேனும் நிம்மதியாக இருக்கலாம் என்றால், உனக்குப் பேச வேறு விஷயம் கிடைக்கவில்லையா, மனோ? அவரால் நான் பட்ட துன்பம் போதும், விடு!'' என்று மாதவி எரிச்சல் பட்டதையும் மீறிக் கொண்டு, மனோகரி, கிருபாகரனுக்காக வக்காலத்து வாங்கிப் பேசினாள்.

ஆனால், அவள் என்ன பேசியும், மாதவி, அதைக் கொஞ்சமும் ஏற்க மறுத்தாள்!

## 28



'அவரும் நொந்திருப்பது போலத் தோன்றுகிறது!' என்று, கிருபாகரனைப் பற்றி மனோகரி முதல் முறை சொன்னதே, மாதவிக்கு வருத்தம்தான்.

அவனால், அவள் அனுபவித்த துன்பம் முழுவதையும் கூட இருந்து பார்த்தவள், மனோகரி! அதன் பிறகும், அவனைப் பற்றி நல்லதாக ஒரு வார்த்தை சொல்லலாமா?

ஏதோ, அவன் நடிப்பில் ஏமாந்து சொல்லி விட்டாள் என்று, அவன் நடிப்பைப் பற்றிப் பேச, அப்போது விஷயம் அத்தோடு முடிந்தது!



முழுமையாக முடிந்தது என்று மாதவி நினைத்துக் கொண்டிருக்க, மனோகரி மீண்டும் அவனைப் பற்றிப் பேசவும், அவளுக்கு எரிச்சலாகி விட்டது!

மனோகரி அவனை முற்றும் உணர்ந்தவள். எனவே அவளிடம் மாதவி எதையும் மறைத்து நடிக்கத் தேவை இருந்ததில்லை!

ஆனால், எரிச்சலை மறைக்காமல் காட்டிய பிறகும், உயிர்த் தோழி, அவனைப் பற்றியே பேசவும், வியப்பும் வருத்தமுமாக அவளைக் கூர்ந்து நோக்கினாள். ''என்ன ஆயிற்று, மனோ?'' என்று வினவினாள்.

சட்டெனச் சிரித்து, ''என்னப்பா, எனக்குப் பைத்தியமோ என்று தோன்றுகிறதா? அதெல்லாம் இல்லை! உன் வாழ்க்கையைச் செப்பனிட ஒரு வழி இருக்கும்போது, அதற்குரிய முயற்சியைச் செய்யாமல், நான் எப்படிச் சும்மா இருப்பது? சொல்லு!'' என்று கேட்டாள் அவள்.

''அதாவது, சீர் குலைந்து, கண்டபடி உடைந்து சிதறிக் கிடக்கும் என் வாழ்வைத் தாஜ்மகாலாகக் கட்டி நிலை நிறுத்த, இப்போது வழி கிடைத்து விட்டது! அப்படியா?'' என்று, கிண்டலாகக் கேட்டாள் மாதவி.

''ஆமாம்!'' என்றாள் மற்றவள் அழுத்தம் திருத்தமாக. ''மது, மன்னிக்கத் தகாத தப்பு என்று ஒன்றுமே கிடையாதுப்பா! தான் செய்த தப்பை உணர்ந்து வருந்தும்போது, நாம் மன்னிக்கவும் வேண்டும் அல்லவா? கிருபாகர் இப்போது எப்படி வருந்துகிறார், தெரியுமா? உனக்காக வெகுவாக ஏங்குவதும் தெரிகிறது! மிகவும் நல்லவராகவும் வாழ்கிறார்...'' என்று, தானும் கணவனுமாகச் செய்ததை எல்லாம், மனோகரி எடுத்துச்

சொன்னாள். ''புடம் போட்ட மாதிரி ஆகிவிட்டார், மாதவி! நீ அவரை மன்னித்து ஏற்றுக் கொண்டால் என்ன?''

''எதற்காக? எனக்கு அவர் தேவை இல்லை!'' என்றாள் மாதவி சுருக்கமாக.

''என்ன தேவை இல்லை? நாளைக்கே நித்தி வளர்ந்து, அப்பா வேண்டும் என்றால் என்ன செய்வாய்?''

''உண்மையைச் சொல்வேன்!'' என்றாள் மாதவி, தலையைத் திருப்பிக் கொண்டு.

''என்னத்தையெல்லாம் சொல்லுவாய்? சொன்னாலும், அவனுக்குப் புரியுமா? வாய் வார்த்தைக்கு, என்ன வேண்டுமானாலும் பேசாதே!'' என்றாள் மனோகரி, சற்றுக் கண்டிப்பான குரலில்.

''சும்மா சொல்லவில்லை, மனோ! நிச்சயமாக, இனி ஒருபோதும், என் வாழ்வில் அவருக்கு இடம் கிடையாது!'' என்றாள் மாதவி அழுத்தம் திருத்தமாக.

''யோசித்தே பாராமல், பட்டென்று இப்படிச் சொன்னால், எப்படி மது? நான் உன் கெடுதலுக்குச் சொல்வேனா? உன் கண்ணில் ஒரு சொட்டுக் கண்ணீர் வடிந்தால், எனக்குப் பொறுக்குமா? நானே இவ்வளவு சொல்கிறேன் என்றால், ஆராய்ந்து பாராமலா சொல்லுவேன்? கண்ணனுக்கும்கூட என் கருத்தேதான்! நாங்கள் இருவருமே உன் நலம் விரும்பிகள் என்று உனக்குத் தெரியாதா? அதற்காகவாவது, சற்று யோசிக்கக் கூடாதா?''

சிறு மௌனத்தின் பின், மாதவி மெல்ல நிமிர்ந்து, தோழியைப் பார்த்தாள்.



''மனோ, அவர் எவ்வளவு பெரிய நடிகர் என்று உனக்குத் தெரியுமே! ஒரு தரம் ஏமாறலாம்! மரண அடி பட்ட பிறகும், ஒரு பூனைக்குள்ள சுரணை கூடவா இல்லாமல் இருப்பது?''

''இல்லை, மது! அவர் கண்ணில் வேதனை இருக்கிறது! அது பொய்யில்லை!''

உதட்டளவாய் முறுவலித்தாள் மாதவி. ''படிப்பதில் இருந்து பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். மனோ! சிறு வயதில், 'தர்ட்டி நைன் ஸ்டெப்ஸ்' என்று ஒரு துப்பறியும் கதையை விழுந்து விழுந்து படித்தோம், நினைவிருக்கிறதா? ஓர் உளவாளியின் கதை! அதில், கை தேர்ந்த வில்லன், எந்த வேஷம் ஏற்று நடிக்கிறானோ, அந்தப் பாத்திரமாகவே மாறிவிடுவான் என்று எழுதியிருந்தது! அந்த ஐடியாவை வைத்துதான், அதில் வில்லனைக் கண்டு பிடிப்பார்கள்! நினைவிருக்கிறதா? கிருபாகரனுக்கு அது எவ்வளவு கை வந்த கலை என்பது, எனக்குத் தெரியும்! இப்போதும், அது போலத்தான்! திருந்தி வருந்தும் கணவனாக மாறியிருக்கிறார்! அவ்வளவே! அப்புறம் என்ன சொன்னாய்? மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக நல்லவராக இருப்பதாகவா? நீயும் யோசி, மனோ! கிருபாகரும் எத்தனை சினிமா பார்த்திருப்பார்! அப்போதைக்கு விலகிப் போனாலும், கொஞ்ச காலத்தில் மாதவியோ, அல்லது, இன்னும் கொஞ்ச அதிகம் காலம் கழிந்த பின், அவள் பிள்ளையோ திரும்பி வந்து அடிக்கக் கூடும் என்று எதிர்பாராமலா இருந்திருப்பார்? அந்த நிலைக்காக, அவர் அன்றிலிருந்தே தயாராகிக் கொண்டு இருந்திருக்கலாமே! முன்பு, மாதக்கணக்கில் இருந்த கவனம்,



இப்போது ஆண்டுக் கணக்கில் இருக்கவில்லை என்று என்ன நிச்சயம்? ம்...?''

திக்கல், திணறல் இன்றி, மாதவி ஒரு சீராய்ப் பேசி முடித்தபோது, பேச்சிழந்து போனது, மனோகரிதான்!

மெல்லத் தலையசைத்து, ''இல்லை, மாதவி! இப்படி யோசிக்காதே! ஒருவர் செயலை, இப்படி இருந்திருக்கும், அப்படி நினைத்திருப்பார் என்று நாம் வண்ணம் தீட்டத் தொடங்கினால், அதற்கு முடிவே கிடையாது! கொஞ்சம் நல்ல விதமாகவும் நினைத்துப் பார்க்க வேண்டும்மா!'' என்றாள் மனோகரி!

உறுதியாக மறுத்தாள் மாதவி. ''கிருபாகரனை நல்லவிதமாக நினைக்கவே முடியாது, மனோ! அவருக்கு என் வாழ்வில் இடமும் கிடையாது!'' என்றாள் முடிவாக.

சற்று யோசித்துவிட்டு, ''இந்த முடிவினால் பாதிக்கப்படப் போவது, நீ மட்டுமல்ல, மாதவி!'' என்று வறண்ட குரலில், மனோகரி உரைத்தாள், வருத்தத்துடன்.

''நித்திதானே? இப்படி ஒரு தகப்பனுக்குப் பிறந்ததற்கு, அவனும் பட்டுத்தானே ஆகவேண்டும்?'' என்றாள் மாதவி.

''பாதிப்பு நித்திக்கு மட்டுமல்ல! எங்களுக்கும்!'' என்றாள் மனோகரி, மீண்டும் வருத்தமாகவே.

''எ... என்ன சொல்கிறாய், மனோ? உங்களுக்கும் என்றால்? அப்படியென்றால் என்ன அர்த்தம்?'' என்று, கலக்கத்துடன் கேட்டாள் மாதவி.

''நாங்கள் என்றால், கண்ணனும் நானும் என்று அர்த்...''



''ச்சு! நான் அதைக் கேட்கவில்லை! இந்த விஷயத்தில், உங்கள் இருவருக்கும் என்ன பாதிப்பு? அதைக் கேட்கிறேன்!'' என்று படபடத்தாள் மாதவி.

''என்ன பாதிப்பா? ஒன்றுமே புரியாத மாதிரிக் கேட்கிறாயே! நீ இப்படித் தனி வாழ்வு வாழும்போது... உண்மையைச் சொல்லி விடுகிறேனே! எங்களால், இயல்பாக வாழ முடியவில்லை, மாதவி! இப்படி இருப்பதற்கு, நான் பேசாமல், பழையபடி விடுதியில் தங்கி, நர்ஸ் பணியைத் தொடர்வது மேல் என்று தோன்றுகிறது!''

''என்ன உளறுகிறாய்?!''

''உளறல் அல்ல, உண்மை!'' என்றாள் மனோகரி பிடிவாதக் குரலில்.

நோயாளிகளுக்குக் கட்டாயப்படுத்தி மருந்து கொடுத்துப் பழகியவள்தானே? தோழியின் வாழ்வை நல்லபடி திசை திருப்பவும், அதுதான் வழி என்று எண்ணினாள்.

முகம் இறுக, ''அதாவது, நான் கிருபாகரனை ஏற்கவில்லை என்றால், நீ கண்ணனைப் பிரிந்து விடுவாய்! அப்படியா?'' என்று கேட்டாள் மாதவி.

''இன்றைக்கே இல்லை என்றாலும், கொஞ்ச காலத்தில், அப்படித்தான் ஆகும். நிச்சயமாக அப்படி ஆகிவிடுமோ என்பது, என் பயம்!'' என்றாள் மனோகரியும்.

தோழியை ஆழப் பார்த்தாள் மாதவி.

பிறகு, ''அதற்கு முன் நானே செத்துவிட்டால்...'' என்று ஓர் அலட்சிய பாவனையுடன் அவள் கூற, ''ஏஏ.. ஏய்! என்னடி?! என்ன உளறல் இது?'' என்று மனோகரி பதறிப் போனாள்.

''உளறல் என்ன? நான் உயிரோடு இருந்தால்தானே, நீ இப்படி என்னை மிரட்ட முடியும்? நானே செத்துப் போனால், இந்தப் பிரச்சினை தானாகத் தீர்ந்துவிடும்தானே?''

''உனக்கு ஒரு பிள்ளை இருக்கிறதே! அதன் கதி என்ன ஆகுமாம்?'' என்று கோபமாகக் கேட்டாள் மனோகரி.

''ஒன்றும் ஆகாது! என்னையே பார்த்துக் கொண்டவள் நீ! எனக்காக வேலையைக் கூட விட்டுவிட்டு வந்தவள்! என் பிள்ளையை வளர்க்க மாட்டாயா, என்ன?''

''அந்தத் தைரியத்தில்தான் பதிலுக்கு மிரட்டுகிறாயா?'' என்று, மீண்டும் கோபமாகவே மனோகரி வினவினாள்.

''இது வெறும் மிரட்டல் அல்ல! உண்மை!'' என்றபோது, மாதவியின் முகத்தில் கனல் வீசியது. ''படுக்கையில் கூட, நடித்தேன் என்றாரே! அந்த மனிதரோடு மீண்டும் இணைந்து வாழ்வதைவிடச் சாவு நிச்சயமாகவே மேலானதுதான்! நீ இன்னொரு தரம் இப்படிப் பேசினால் நடக்கப் போவதும்கூட!'' என்றபோது, மாதவியின் குரலிலுமே தீப்பொறி பறந்தது!

## 29



கிருபாகரனைப் பற்றி, இனி ஒரு வார்த்தை கூடப் பேசுவதில்லை என்று மனோகரி சத்தியம் செய்யாத குறையாகக் கூறிய பிறகும், மாதவியின் ஆத்திரம் அடங்கவில்லை! மாறாகப் பெருகியது என்றே சொல்லலாம்!

ஆனால், பொங்கிப் பெருகிய சீற்றத்தின் இலக்கு மாறிவிட்டது!



அன்றைய மனோகரியின் பேச்சின் முழுக் காரணமும், தோழியின் நன்மையை உத்தேசித்தே என்று உணர முடிந்ததால், அவளிடம் மாதவிக்கு அதிகக் கோபம் வரவில்லை! எல்லாம் தெரிந்திருந்தும், இவளே இப்படிச் சொல்லுகிறாளே என்கிற வருத்தம் மட்டும்தான்.

ஆனால், இந்தப் பேச்சின் காரணகர்த்தா யார்? கிருபாகரன்தானே!

சில ஆண்டுகளுக்கு முன், மாதவியிடம் நல்லவனாகக் காட்டிக்கொண்டு, அவளைக் குற்றுயிராக்கினான்.

இப்போது, அதே கதையை, அவளிடமே நடித்தால், 'பப்பு வேகாது' என்று உணர்ந்து, மனோகரியிடம் உத்தமன் வேஷம் போடுகிறான்!

கூடவே, பெண்டாட்டி, பிள்ளைக்காக ஏங்குவது போலக் காட்டிக் கொண்டிருப்பான்! தனக்காகப் பேசுமாறு கேட்டும் இருப்பான்!

மற்றப்படி, மனோகரி இதில் தலையிட்டிருக்கவே மாட்டாள். அதுவும், பழைய கதை முழுவதும் தெரிந்திருக்கும் போது!

இருக்கட்டும்! இதுபோல இன்னொரு முயற்சி செய்யும் நினைவே வராத அளவுக்கு, அவனை வறுத்து எடுத்து விடவேண்டும்!

மறுநாள் மாலையில், அன்றைக்குச் செய்யப்பட்டிருந்த அலுவல்கள், மறுநாள் செய்ய வேண்டிய வேலைகள் போன்றவற்றைப் பேசி முடித்துவிட்டு, அந்தத் துறைத் தலைமைப் பொறுப்பில் உள்ளவர்கள் சென்ற பிறகு, ''உங்கள்